**கவனிக்க.**-*2023.06.02 ஆந் திகதிய 2335 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி IV (அ) பிரசுரிக்கப்படவில்லை.*

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

**අංක 2336 - 2023 ජුනි මස 09 වැනි සිකුරාදා - 2023.06.09**

*2336 ஆம் இலக்கம் - 2023 ஆம் ஆண்டு யூன் மாதம் 09ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி I : தொகுதி (IIஆ) - விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | - | உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள் | 920 |
| கேள்விப்பத்திர முடிவுகள் பற்றிய அறிவித்தல்கள் | - | அந்நிய குடிவகை உத்தரவுச்சீட்டு விண்ணப்பங்கள் | - |
| பொருட்கள் விற்பனவும் பிறவும் | 918 | ஏல விற்பனைகள் | 921 |
| ஆய விற்பனையும் குத்தகையும் | - | நானாவித அறிவித்தல்கள் | - |


### வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான

### முக்கிய அறிவித்தல்கள்

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.*

*வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை* ***வர்த்தமானியில் பிரசுரமாகுந் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.*** *இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பி வைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்கத் திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.*

*வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முன்னர், அதாவது 2023, யூன் மாதம் 30 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2023, யூன் மாதம் 16 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.*

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்.".*

**கங்கானி லியனகே,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2023 ஆம் ஆண்டு சனவரி மாதம் 02 ஆந் திகதி.*

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

917- B 082462 - 5,403 (2023/06)

# பொருட்கள் விற்பனவும் பிறவும்

**நீதிவான் நீதிமன்றம்- யாழ்ப்பாணம்**

நீதிமன்றினால் பறிமுதல் செய்யப்பட்டதும் இதுவரை உரிமை கோரப்படாததுமான துவிச்சக்கர வண்டிகள், தொலைபேசிகள் மற்றும் ஏனைய பொருட்களின் பகிரங்க ஏல விற்பனை

1. யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றின் வழக்குகளில் பறிமுதல் செய்யப்பட்டதும், இதுவரை உரிமை கோரப்படாததுமான துவிச்சக்கர வண்டிகள், தொலைபேசிகள் மற்றும் ஏனைய பொருட்கள் 2023.06.24ஆந் திகதி இந் நீதிமன்ற வளாகத்தினுள் வைத்து காலை 9.30 மணிக்கு பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்.

2. எவரேனும் ஒருவர் இங்கு குறிப்பிட்டுள்ள ஏதாவது பொருட்களை உரிமை கோருமிடத்து, அவர் விற்பனை தொடங்குவதற்கு அரை மணித்தியாலத்திற்கு முன்பு தமது கோரிக்கையைச் சமர்ப்பிக்க வேண்டும்.

3. பொது மக்கள், மன்றின் பதிவாளரின் அனுமதியுடன் விற்பனைக்கு அரை மணித்தியாலத்திற்கு முன்பு பின்வரும் பொருட்களினைப் பார்வையிடலாம்.

4. ஏல விற்பனையின் போது விற்பனைக்காக வைக்கப்பட்டுள்ள ஏதாவது பொருட்களுக்கு மதிப்புவிலை கிடைக்காதவிடத்து, அப்பொருளின் ஏல விற்பனையை மீளப்பெறும் உரிமையை மன்று தன்னகத்தே கொண்டிருக்கும்.

5. விற்கப்பட்ட பொருட்களுக்கான பணத்தினை உடனே செலுத்தி, அவற்றை உடனடியாக நீதிமன்ற வளாகத்திலிருந்து அகற்ற வேண்டும். சகல கொடுப்பனவுகளும் காசாகவே செலுத்தப்படல் வேண்டும். காசோலைகள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

ஏ.ஏ. ஆனந்தராஜா,
நீதிவான்.

நீதிவான் நீதிமன்றம்,
யாழ்ப்பாணம்.

**சான்றுப் பொருட்களின் விபரம்**

| தொ.இல. | வழக்கு இல. | PR இல. | சான்றுப் பொருள் விபரம் |
|---|---|---|---|
| 1 | BR/707/S21 | PR/1401/21 | பிளாஸ்ரிக் கதிரை 03 |
| | MC/69/S/22 | | சிறிய பிளாஸ்ரிக் மேசை 01 |
| 2 | AR/398/22 | PR/683/22 | உழவு இயந்திரப் பெட்டி கதவு 01 |
| 3 | BR/123/S/21<br>MC/568/S/22 | PR/143/21 | சவள் 02 |
| 4 | BR/1644/S/21<br>MC/1639/S/21 | PR/1596/21 | சவள் 02 |
| 5 | MC/2708/S/20 | PR/3375/20 | சவள் 01 |
| 6 | BR/499/S/22<br>MC/1927/S/22 | PR/886/22 | சவள் 01 |
| 7 | AR/629/21 | PR/1393/21 | சாய் கதிரை 01 |
| | | PR/1570/21 | றைஸ் குக்கர் 01 |

| தொ.இல. | வழக்கு இல. | PR இல. | சான்றுப் பொருள் விபரம் |
|---|---|---|---|
| 8 | BR/1061/MT/18<br>MC/3034/MT/18 | PR/1612/18 | இல. இல்லை, துவிச்சக்கர வண்டி 01 |
| 9 | BR/480/MT/21<br>MC/355/MT/22 | PR/891/21 | இல.70039071 துவிச்சக்கர வண்டி 01 |
| 10 | BR/577/PC/20<br>MC/921/PC/20 | PR/945/20 | தண்ணீர் மோட்டர் 01 |
| 11 | BR/1051/PC/21<br>MC/316/PC/22 | PR/716/21 | கோவில் வாகன சில்லு 02 |
| 12 | BR/151/PC/19<br>MC/1260/PC/19 | PR/188/19 | பித்தளைப் பொருட்கள் 03 |
| 13 | BR/1615/S/20<br>MC/456/S/21 | PR/325/20 | சவள் 02 |
| 14 | BR/1031/PC/21<br>MC/744/PC/22 | PR/695/21 | 01. 01 அடி நீளமான இரும்பு ஜக் - 14 |
| | | | 02. துவிச்சக்கர வண்டி 01 |
| | | PR/696/21 | 01. மரம் வெட்டும் டிசைனர் 01 |
| | | | 02. றில்லர் 01 |
| | | | 03. சுத்தியல் 03 |
| | | | 04. அலவாங்கு 01 |
| | | | 05. உளி 01 |
| 15 | BR/454/PC/22<br>MC/1192/PC/22 | PR/807/22 | பனைமரக்கட்டைகள் 07 |
| | | PR/808/22 | சோடா கேஸ்- 07 |
| 16 | BR/559/PC/22<br>MC/1420/PC/22 | PR/1029/22 | இரும்பு பைப் - 03 |
| | | PR/1030/22 | துவிச்சக்கர வண்டி- 01 |
| 17 | BR/1445/PC/22<br>MC/3024/PC/22 | PR/708/22 | துவிச்சக்கர வண்டி - 01 |
| 18 | BR/157/PC/22<br>MC/4294/PC/23 | PR/149/23 | காஸ் சிலிண்டர்- 01 |
| | | PR/150/23 | காஸ் சிலிண்டர்- 01 |
| 19 | BR/31/PC/19<br>MC/404/PC/19 | PR/32/19 | வாகன கசட் ரேடியோ- 01 |
| | | PR/33/19 | வாகன கசட் ரேடியோ- 01 |
| 20 | BR/1014/PC/22<br>MC/4373/PC/23 | PR/1601/22 | I TEL A 48 Smart phone - 01 |
| | | PR/1602/22 | I Phone XR - 01 |
| | | PR/1603/22 | Samsung s 9 Phone - 01 |

| தொ.இல. | வழக்கு இல. | PR இல. | சான்றுப் பொருள் விபரம் |
|---|---|---|---|
| 21 | BR/1298/ODD/20 MC/3602/ODD/20 | PR/1059/20 | Huwawi Phone - 01, இலத்திரனியல் தராசு - 01 |
| | | PR/1060/20 | Phone - 12 |
| | | PR/1061/20 | DVR றிசிவர் - 01 |

06- 151

# உத்தியோகத்தொடர்பற்ற அறிவித்தல்கள்

## பெயர்மாற்ற பொது அறிவித்தல்

*கம்பனியின் பழைய பெயர்:* பாமர்ஸ் இன்டர்நெஷனல் (பிரைவட்) லிமிட்டட்

*கம்பனி இல.:* PV 63379

*பதிவு முகவரி:* இல.39, சென். மைக்கல்ஸ் ரோட், கொழும்பு - 03

*கம்பனியின் புதிய பெயர்:* குளோபல் புரொஜெக்ட்ஸ் கனெக்ட் (பிரைவட்) லிமிட்டட்

செயலாளர்.

06-165

## கடன் வழங்கியவர்களுக்கான அறிவிப்பு

வெயிட்ரானிக்ஸ் லெவிலி (பிவிடி) லிமிடெட் (PV562) இல.567/2, அதுகிரிய பாதை, மாலபே நிறுவனத்துக்கு எதிராக வருமதி உரிமை கோரும் கடன் வழங்கியவர் மற்றும் ஏனையோர் அதன் விவரங்களை, கீழ்க்காணும் பெயருடைய கம்பெனி கலைப்பாளருக்கு 2023, யூலை 10 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் அனுப்ப வேண்டும் என இத்தால் கோரப்படுவது பற்றிய அறிவித்தல் தரப்படுகிறது.

எஸ். ரன்வத்த,
கலைப்பாளர்.

3 ஆவது மாடி,
இல.09,
பாடசாலை பாதை,
கொழும்பு-03.

06-167

## பொது அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(2) ஆம் பிரிவின் விதிகளின் கீழ் 2023, மே 23 ஆந் திகதி முதல் அமுலுக்கு வருமாறு மரினோ பீச் (பிரைவட்) லிமிட்டட் ஆனது தனது பெயரை மரினோ லெஷர் ஹோல்டிங்ஸ் ( பிரைவட்) லிமிட்டட் என மாற்றம் செய்வதாக சொல்லப்பட்ட சட்டத்தின் 8 ஆம் பிரிவின் விதிகளுக்கமைய இத்தால் அறிவித்தல் விடுக்கப்படுகின்றது.

*கம்பனியின் பழைய பெயர்:* மரினோ பீச் (பிறைவட்) லிமிட்டெட்

*கம்பனி இலக்கம்:* பீவீ 79471

*பதிவு அலுவலகம்:* இல.361, கண்டி வீதி, நிட்டம்புவ

*கம்பனியின் புதிய பெயர்:* மரினோ லெஷர் ஹோல்டிங்ஸ் (பிறைவட்) லிமிட்டெட்

சபையின் கட்டளைப் பிரகாரம்,

கோர்பரேட் சேர்விஸ்
(பிறைவட்) லிமிட்டெட்,
செயலாளர்.
மரினோ லெஷர் ஹோல்டிங்ஸ்
(பிறைவட்) லிமிட்டெட்.

06-170

## மேர்க்கன்டைல் எமறல்ட் ஷிப்பிங் (பிரைவேட்) லிமிட்டட்
## (கடன்கொடுத்தோர் தன்னிச்சையான ஒடுக்குதல்)
## கம்பனியின் பதிவு இல. -PV 61508

### கம்பனியின் இறுதிப்பொதுக்கூட்டம், கடன்கொடுத்தோர் கூட்டம் மற்றும் கம்பனி கலைத்தலுக்குமான அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 341(1) ஆம் பிரிவுக்கமைவாக மேற்படி கம்பனியின் கலைப்பு முந்திய இறுதிப் பொதுக்கூட்டம் மற்றும் கடன் கொடுத்தோர் கூட்டம் என்பன 2023 ஆம் ஆண்டு ஆடி மாதம் 17 ஆந் திகதி பிற்பகல் 4.00 மணியளவில் இலக்கம்

11, காசல் ஒழுங்கை, 3 ஆம் மாடி, கொழும்பு 04 இல் நடைபெறவுள்ளது. மேற்படி கூட்டமானது கலைத்தலுக்கான கணக்கு விபரங்ளை அங்கத்தவர்களுக்கு கீழ்க் குறிப்பிட்ட வகையில் சமர்ப்பிப்பதற்காக கூட்டப்படுகின்றது.

1. ஒடுக்குதல் எவ்வாறு நடைபெற்றது
2. கம்பனியின் சொத்துக்கள் ஏதுமிருப்பின் அவற்றை விற்று ஒதுக்கிய முறை மற்றும்
3. இவைப் பற்றிய விளக்கம் அறிவித்தல்

ஜெராட் ஜீவானந்தன் டேவிட்,
கலைப்பாளர்.

மோர்கன்டைல் எமறல்ட் ஷிப்பிங் (பிரைவேட்) லிமிட்டட்,
இலக்கம் 11, 3 ஆம் மாடி,
காசல் ஒழுங்கை,
கொழும்பு-04.
2023, ஆனி மாதம் 01.

06-188

---

## UTI பெர்ஷிப் (பிரைவேட்) லிமிடட், DSV பெர்ஷிப் ( பிரைவேட்) லிமிடட் ஆகியவற்றின் ஒருங்கிணைப்பு

UTI பெர்ஷிப் (பிரைவேட்) லிமிடட் நிறுவனத்தின் (PV 3379) பணிப்பாளர் சபை ("ஒருங்கிணைக்கும் நிறுவனம்") மற்றும் DSV பெர்ஷிப் ( பிரைவேட்) லிமிடட் நிறுவனத்தின் (PV128708) பணிப்பாளர் சபையினால் குறித்த நிறுவனங்கள் ஒருங்கிணைக்கப்படும் என தீர்மானிக்கப்பட்டுள்ளது. அதனடிப்படையில் குறித்த இரு நிறுவனங்களும் 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்கம் கொண்ட கம்பனிகள் சட்டத்தின் (திருத்தப்பட்ட) பிரிவு 239 இன் கீழ் ஒரே சட்டபூர்வ நிறுவனமாக ஒருங்கிணைக்கப்பட்டு DSV பெர்ஷிப் (பிரைவேட்) லிமிடட் ஆக கருதப்படும்.

குறித்த ஒருங்கிணைப்பு செய்யப்படும் இரு நிறுவனங்களினதும் பங்குதாரர்களினால் 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்கம் கொண்ட கம்பனிகள் சட்டத்தின் ( திருத்தப்பட்ட) பிரிவு 241(5) இன்படி 2023, யூன் மாதம் 05 ஆந் திகதி நடைபெறவுள்ள விசேட பொது கூட்டமொன்றில் ஒருங்கிணைப்புதற்கு கட்டுப்பட்டுள்ளது.

ஒருங்கிணைப்பு திட்டத்தினை பங்குதாரர்கள் ஆராய்வதற்கு அல்லது அனுமதிப்பதற்கு முன் வைப்பதுடன், அவ்வாறு அனுமதிக்கப்பட்டால், குறித்த திட்டம் 2023 ஆம் ஆண்டு யூலை மாதம் 14 ஆந் திகதி அல்லது நிறுவன பணிப்பாளர் நாயகத்தினால் அனுமதிக்கப்பட்டதன் பின்னர் நடைமுறைப்படுத்தப்படும்.

ஒருங்கிணைப்பு திட்டத்தின் பிரதிகள் எந்தவொரு பங்குதாரர்களுக்கும் அல்லது கடன்தாரரொருவருக்கு அல்லது ஒருங்கிணைக்கும் நிறுவனத்தின் அல்லது DSV பெர்ஷிப் (பிரைவேட்) லிமிடட் நிறுவனம் கடமைப்பட்டிருக்கும் நபர் களுக்கு, இல.72C, பௌத்தாலோக மாவத்தை, கொழும்பு-04 எனும் அமைவிடத்தில் பொதுவான விற்பனை நேரத்தில் இலவசமாக பெற்றுக் கொள்ள முடியும்.

சபையின் ஆணையின் பிரகாரம்,

நிறுவன செயலாளர்,
UTI பெர்ஷிப் (பிரைவேட்) லிமிடட்,
DSV பெர்ஷிப் (பிரைவேட்) லிமிடட்.

06-231

---

# ஏல விற்பனைகள்

**சம்பத் வங்கி பீஎல்சீ**

(முன்பு சம்பத் வங்கி லிமிடெட் என அழைக்கப்பட்டது)

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 09 ஆம் பிரிவின் கீழான விற்பனை அறிவித்தல்

ருஹுணுபுத்தா டீஸ் ( பிறைவெட்) லிமிடெட்
கணக்கு இல.: 0015 1000 3485

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 04ஆம் பிரிவின் கீழ் சம்பத் வங்கி பீஎல்சீ பணிப்பாளர் சபையினால் 2022.06.30ஆந் திகதி நடைபெற்ற கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்திற்கு அமைவாக 2023.03.31ஆந் திகதிய இலங்கை வர்த்தமானியிலும் (Gazette) 2023.03.30ஆந் திகதிய "திவயின" (Divaina), "ஐலண்ட்" (Island), "தினக்குரல்" (Thinakkural) ஆகிய பத்திரிகைகளில் வெளியிடப்பட்ட அறிவித்தல்களுக்கிணங்க நிலுவை முதலான ஏழு கோடியே எழுபத்தி ஏழு இலட்சத்து அறுபத்தி இரண்டாயிரத்து அறுநூற்று எண்பத்தி இரண்டு ரூபா முப்பத்தி இரண்டு சதம் (ரூபா77,762,682.32) 2022 மாச்சு 11 ஆந் திகதி முதல் அறவிடப்பட வேண்டிய, மொத்தத் தொகையைச் செலுத்தித் தீர்க்கும் திகதி வரை நான்கு இலட்சத்து நாற்பத்தி ஒன்பதாயிரத்து நாநூற்று தொண்ணூற்றி ஏழு ரூபா ஐம்பது சதம் (ரூபா 449,497.50) கட்டணத்திற்காக Average Weighted Prime Lending Rate Plus ஒன்று தசம் ஐந்து வீதம்

வருடாந்தம் (AWPLR+1.5% p.a.), மேலும் ஒரு கோடியே எழுபத்தி ஆறு இலட்சத்து தொண்ணூற்றி ஒன்பதாயிரத்து ஐந்நூறு ரூபா (ரூபா 17,699,500.00) இத்துடன், மேலதிக வட்டியாக ஆண்டொன்றிற்கு பதினான்கு வீதம் (14%), மேலும் மூன்று கோடியே நாற்பது இலட்சத்து முப்பததோராயிரத்து எழுநூற்று தொண்ணூற்றொரு ரூபா நாற்பத்தி ஏழு சதம் (ரூபா 34,031,791.47) இத்துடன், மேலதிக வட்டியாக ஆண்டொன்றுக்கு பதின் மூன்று வீதம் (13%), மேலும் எண்பது இலட்சம் ரூபா (ரூபா 8,000,000.00) இத்துடன், மேலதிக வட்டியாக ஆண்டொன்றுக்கு பதினான்கு வீதம் (14%) வருமதியாகவுள்ள வட்டியுடன், விளம்பரச் செலவுகள், ஏனைய செலவுகள், ஏதேனும் கட்டணங்கள் செலுத்தப்பட்டிருப்பின் அவற்றையும் கழித்து அறவிட்டுக் கொள்வதற்கு கூறப்பட்ட ஈட்டு முறி 3591, 2955, 4553 மற்றும் 3717 இன் மீது பிணையாக வைக்கப்பட்டுள்ள சொத்துக்கள், நிலமனைகளை கொழும்பு உத்தரவுபெற்ற ஏலதாரர்களான பீ. கே. ஈ. சேனாபத்தி என்பவர்கள் மூலமாக 2023.07.12 ஆந் திகி மு.ப.11.30 மணி முதல் அதே இடத்தில் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும் என இத்தால் தீர்மானிக்கப்படுகின்றது.

### மேற்குறிப்பீடு செய்யப்பட்ட அட்டவணை

தென் மாகாணம், மாத்தறை மாவட்டம், வெலிகம் கோரலே அக்குரெஸ்ஸ பிரதேச சபை எல்லைகளுக்குள் மற்றும் பிரதேச செயலாளர் பிரிவின் (368) பாஹால மாலிதூவ கிராம அலுவலர் பிரிவின் மாலிதூவையில் அமைந்த "லொட்கள் 4 மற்றும் 5 இன் ஒன்றிணைக்கப்பட்ட மீள் அளவீடு செய்யப்பட்டு உப பிரிவாக்கப்பட்ட மாலிதூவவத்த, தெமலியகொட வத்த மற்றும் அலிக்கெஹேனவின்" என்றழைக்கப்படும் காணிக்கு உத்தரவுபெற்ற நில அளவையாளர் எச். எல். ஆர். ஜயசுந்தர என்பவரால் தயாரிக்கப்பட்ட 2011, ஓகத்து 01 ஆந் திகதியிடப்பட்ட இல. 3087 எனும் வரைபடத்தில் காட்டப்பட்ட அனைத்தும் பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்டு லொட் A எனக் குறிப்பிடப்பட்ட காணியின் எல்லைகளாவன - வடக்கு : பிரதேச சபை வீதி; கிழக்கு : பிரதேச சபை வீதி; தெற்கு : பிரதேச சபை வீதி ; மற்றும் மேற்கு : மாலிதூவ வத்தையின் ஒரு பகுதி, ஆகிய இவ் எல்லைகளுக்குள் அமைந்த காணியின் விஸ்தீரணம் இரண்டு ஏக்கர் மூன்று றூட் மற்றும் இருபத்தி எட்டு பேர்ச் (2ஏ. 3றூ. 28பே.) விஸ்தீரணத்தைக் கொண்ட காணியுடன் அங்கு அமைந்த அனைத்தும், நிலம், மரங்கள், பயிர்கள், தேயிலைச் தொழிற்சாலை மற்றும் பொருத்தப்பட்ட இயந்திராதிகள் மற்றும் கட்டடங்களுடன் மற்றும் அதன்கண் அமைந்த அனைத்துமுடன் கூறப்பட்ட இல. 3087 எனும் வரைபடத்திற்கு அமைவாக மாத்தறை காணிப் பதிவகத்தில் பரிமாணம்/பக்கம் Q 65/142 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

மேற் கூறப்பட்ட வளவுகள் மற்றும் அதன் மீது வைக்கப்பட்டுள்ள மற்றும் வேறு இடத்தில்/ இடத்திலிருந்து அல்லது இடங்களிலிருந்து இவற்றை அகற்றி கொண்டு செல் லப்படும் அல்லது களஞ்சியப்படுத்தி வைக்கப்பட்ட அல்லது ஸ்தாபிக்கப்பட்ட அனைத்து மற்றும் ஒவ்வொரு அசையும் இயந்திரக் கூடங்கள் இயந்திராதிகள் மற்றும் உபகரணங்களுடன்.

| *Item* | *No. of Units* | *Description* |
|---|---|---|
| 1. | 07 Nos. | Withering Troughs, 60 x 6', 15 HP Motor<br>S/Nos. RPT/2017/WP/002, RPT/2017/WP/003, RPT/2017/WP/004, RPT/2017/WP/005, RPT/2017/WP/006, RPT/2017/WP/007 |
| 2. | 01 No. | 44" Walkers Single Action Roller with 250 Kg. capacity S/No. RPT/2017/WR/001, 2008 |
| 3. | 01 No. | 45.5" CCC Single Action Roller with 300Kg, S/No. RPT/2017/WR/002 |
| 4. | 01 No. | 36" Walkers Single Action Roller with 200Kg, S/No. RPT/2017/WR/003 |
| 5. | 01 No. | 47" Walkers Single Action Roller with 350 Kg.<br>S/No. RPT/2017/WR/004, 2017 |
| 6. | 02 Nos. | Roll Breakers with 5' x 12", 350 Kg, S/No. RPT/2017/RB/003 |
| 7. | 01 No. | Roll Breakers with 4' x 12", 350 Kg, S/No. RPT/2017/RB/003 |
| 8. | 02 Nos. | Humidity Fan 0.5 Hp Motors |
| 9. | 01 No. | Browns Drier 4" Three Stage, 100Kg, S/No. RPT/2017/CB/002 |
| 10. | 01 No. | Browns Drier 6" two stage, 180Kg, 5.5HP Gear Motor, S/No. RPT/2017/CB/001. |
| 11. | 01 No. | Walker Michie Shifter, 220 Kg, S/No. RPT/2017/MS/001. |
| 12. | 03 Nos. | Michie Shifter, 200 Kg, 2 HP,<br>S/No. RPT/2017/MS/002<br>S/No. RPT/2017/MS/003, S/No. RPT 2017/MS/004 |
| 13. | 01 No. | Michie Shifter, 200 Kg, 2HP, S/No. RPT/2017/MS/005, 2017 |
| 14. | 01 No. | Michie Shifter, 200 Kg, 2HP, S/No. RPT/2017/MS/006, 2017 |
| 15. | 01 No. | Fibre Mate, size drum 06, 200 Kg, S/No. RPT/2017/FM/001 |

| *Item* | *No. of Units* | *Description* |
|---|---|---|
| 16. | 01 No. | Middleton Shifter, 2HP Motors, 300Kg, S/No. RPT/2017/MT/002 |
| 17. | 01 No. | Winnower, Walkers, 5HP Motor, 180Kg |
| 18. | 01 No. | CCC Chota Shifter, 3HP Motors, 220Kg |
| 19. | 01 No. | Colour Separator, C 7500W, 2HP Motor, 60Kg, p/h, S/No. 092 344 |
| 20. | 01 No. | Electronic Colour Sorter, DVR - 2BT, 100 Kg, S/No. 233847 |
| 21. | 01 No. | Tea Cutter, STB 900, 3 speed, 100 Kh |
| 22. | 02 Nos. | Avery Electronic Weight Scales, 300Kg, S/No. L 121 |
| 23. | 01 No. | Avery Weigh Scale (Manual), 250 Kg |
| 24. | 01 No. | Electronic Weigh Scales, 300 Kg |
| 25. | 01 No. | Fire wood splitter, S/No. RPT/2017/PS/001 |
| 26. | 01 No. | Perkins Generator (100 Kva) 8400 Hrs, S/No. C084265/01, Machine ID No. 97301376 |
| 27. | 01 No. | Electric Panel Board. |

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

கம்பனிச் செயலாளர்.

06 - 197

---

**சம்பத் வங்கி பீஎல்சீ**

(முன்பு சம்பத் வங்கி லிமிடெட் என அழைக்கப்பட்டது)

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 09 ஆம் பிரிவின் கீழான விற்பனை அறிவித்தல்

கந்துரட்ட டிரேடிங் ஏஜன்சீஸ் (பிறைவெற்) லிமிடெட்
கணக்கு இல.: 0101 1000 0818

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 04ஆம் பிரிவின் கீழ் சம்பத் வங்கி பீஎல்சீ பணிப்பாளர் சபையினால் 2023.03.30ஆந் திகதி நடைபெற்ற கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்திற்கு அமைவாக 2023.05.26ஆந் திகதிய இலங்கை வர்த்தமானியிலும் (Gazette) 2023.05.15ஆந் திகதிய “திவயின” (Divaina), “ஐலண்ட்” (Island), “தினக்குரல்” (Thinakkural) ஆகிய பத்திரிகைகளில் வெளியிடப்பட்ட அறிவித்தல்களுக்கிணங்க நிலுவை முதலான இரண்டு கோடியே இருபது இலட்சத்து ஐம்பத்தாறாயிரத்து எழுநூற்று இரண்டு ரூபா எண்பத்தியொன்பது சதம் (ரூபா 22,056,702.89) 2023, பெப்புருவரி 13 ஆந் திகதி முதல் அறவிடப்படவேண்டிய மொத்தத் தொகையைச் செலுத்தித் தீர்க்கும் திகதி வரை ஒரு கோடியே ஐம்பத்தி ஒன்பது இலட்சத்து தொள்ளாயிரம் ரூபா (ரூபா 15,990,000.00) இத்துடன் மேலதிக வட்டியாக ஆண்டொன்றுக்கு பத்து வீதம் (10%) மேலும் நாற்பது இலட்சத்து பத்தாயிரம் ரூபா (ரூபா 4,010,000.00). இத்துடன் மேலதிக வட்டியாக ஆண்டொன்றுக்கு ஒன்பது வீதம் (9%) வருமதியாகவுள்ள வட்டியுடன், விளம்பரச் செலவுகள், ஏனைய செலவுகள், ஏதேனும் கட்டணங்கள் செலுத்தப்பட்டிருப்பின் அவற்றையும் கழித்து அறவிட்டுக் கொள்வதற்கு கூறப்பட்ட ஈட்டு முறி இலக்கங்கள் 727, 1471 மற்றும் 261 இன் மீது பிணையாக வைக்கப்பட்டுள்ள இங்கு முதலாவது மற்றும் இரண்டாவது அட்டவணையில் நேர்த்தியாக விபரிக்கப்பட்டுள்ள சொத்துக்கள், நிலமனைகளை கொழும்பு உத்தரவுபெற்ற ஏலதாரர்களான பீ. கே. ஈ. சேனாபத்தி என்பவர்கள் மூலமாக 2023.07.25 ஆந் திகதி 2.30 மணி முதல் அதே இடத்தில் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும் என இத்தால் தீர்மானிக்கின்றது.

**மேற்குறிப்பீடு செய்யப்பட்ட முதலாம் அட்டவணை**

மத்திய மாகாணம், கண்டி மாவட்டம், பாத்த தும்பர உடகம்பாஹா கோரளே பாஹாத்த தும்பர பிரதேச செயலாளர் மற்றும் பிரதேச சபை எல்லைகளுக்குள் மடவல கிராம அலுவலர் பிரிவின் மடவல கிராமத்தில் அமைந்த ‘‘பிட்டியெகெதர எஸ்டேட்’’ என்றழைக்கப்படும் காணிக்கு உத்தரவுபெற்ற நில அளவையாளர் W. K. சுரவீர என்பவரால் தயாரிக்கப்பட்ட 2012, செத்தெம்பர் 29 ஆந் திகதியிடப்பட்ட இல. 2012/50A எனும் வரைபடத்தில் காட்டப்பட்ட அனைத்தும் பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்டு லொட் 2 எனக் குறிப்பிடப்பட்ட காணியின் எல்லைகளாவன - வட மேற்கிற்கு: கொட்டுவெவத்தையின் ஒரு பகுதி, இங்கமைந்த லொட் 3 மற்றும் மடவல முதல் வாவின்ன வரையான வீதியை பிரிக்கும் வடிகால் (Drain) ; வட கிழக்கிற்கு: உத்தரவுபெற்ற நில அளவையாளர் எச். டீ. பீ. குணவர்ன என்பவரால் தயாரிக்கப்பட்ட இல. 1303 எனும் வரைபடத்தின் லொட் 2 இன் ஒரு பகுதி ; தென்கிழக்கிற்கு : இதே வரைபடத்தின் லொட் 4 மற்றும் தென் மேற்கிற்கு மற்றும் மேற்கிற்கு : மடவல முதல் ரெஸ்ட் அரோ எஸ்டேட் முதலான பிரதேச சபை வீதி, கட்டுவெ வத்தையின் ஒரு பகுதி மற்றும் E .V. சிரிசுமன என்பவரால் தயாரிக்கப்பட்ட இல. 9406 எனும் வரைபடத்தின் லொட் 1, ஆகிய இவ் எல்லைகளுக்குள் அமைந்த காணியின் விஸ்தீரணம் இரண்டு றூட் இருபது பேர்ச் (0ஏ.2றூ.20பே.) அல்லது 0.2530 ஹெக்டேயர் விஸ்தீரணத்தைக் கொண்ட காணியுடன் அங்கு அமைந்த அனைத்தும், நிலம், மரங்கள், பயிர்கள், கட்டடங்களுடன்

அதன்கண் அமைந்த அனைத்துமுடன் கூறப்பட்ட இல. 2012/50A எனும் வரைபடத்திற்கு அமைவாக கண்டி காணிப் பதிவகத்தில் பரிமாணம்/பக்கம் L 31/140 இன் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

கம்பனிச் செயலாளர்.

06-220/1

---

## சம்பத் வங்கி பீஎல்சீ

(முன்பு சம்பத் வங்கி லிமிடெட் என அழைக்கப்பட்டது)

### 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 09 ஆம் பிரிவின் கீழான விற்பனை அறிவித்தல்

கோகிலன் ஜுவெல் வார்க்ஸ் அன்ட் ஏ ராமலிங்கம் அன்ட் பீ ஜீ எம் ரம்யலத்தா
கணக்கு இல.: 0025 1000 3538 மற்றும் 0025 5003 3979

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 04ஆம் பிரிவின் கீழ் சம்பத் வங்கி பீஎல்சீ பணிப்பாளர் சபையினால் 2019.10.31ஆந் திகதி நடைபெற்ற கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்திற்கு அமைவாக 2019.12.13ஆந் திகதிய இலங்கை வர்த்தமானியிலும் (Gazette) 2019.12.02ஆந் திகதிய "திவயின" (Divaina), "ஐலண்ட்" (Island), "தினக்குரல்" (Thinakkural) ஆகிய பத்திரிகைகளில் வெளியிடப்பட்ட அறிவித்தல்களுக்கிணங்க நிலுவை முதலான ஒரு கோடியே பதினேழு இலட்சத்து பதினாறாயிரத்து எழுநூற்று முப்பத்தொரு ரூபா இரண்டு சதம் (ரூபா 1,17,16,731.02) 2019, செத்தெம்பர் 11ஆந் திகதி முதல் அறவிடப்பட வேண்டிய மொத்தத் தொகையைச் செலுத்தித் தீர்க்கும் திகதி வரை ஒரு கோடியே பதின்மூன்று இலட்சத்து நாற்பத்தி ஒன்பதாயிரத்து அறுநூற்று நாற்பத்தி மூன்று ரூபா இருபத்தி ஏழு சதம் (ரூபா 1,13,49,643.27) இத்துடன் மேலதிக வட்டியாக ஆண்டொன்றிற்கு பதினைந்து வீதம் (15%) மேலும் ஒரு இலட்சத்து முப்பத்தொன்பதாயிரத்து எழுநூற்று தொண்ணூற்றி இரண்டு ரூபா எண்பத்தி ஆறு சதம் (ரூபா 1,39,792.86) இத்துடன் மேலதிக வட்டியாக ஆண்டொன்றுக்கு பதினாறு தசம் ஐந்து வீதம் (16.5%) வருமதியாகவுள்ள வட்டியுடன், விளம்பரச் செலவுகள், ஏனைய செலவுகள், ஏதேனும் கட்டணங்கள் செலுத்தப்பட்டிருப்பின் அவற்றையும் கழித்து அறவிட்டுக் கொள்வதற்கு ஈட்டு முறி இலக்கங்கள் 1494, 2192 மற்றும் 3028 இன் மீது பிணையாக வைக்கப்பட்டுள்ள சொத்துக்கள், நிலமனைகளை கொழும்பு உத்தரவுபெற்ற ஏலதாரர்களான கே. பீ. என். சில்வா என்பவர்கள் மூலமாக 2023.06.30 ஆந் திகதி மு.ப. 10.30 மணி முதல் அதே இடத்தில் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும் என இத்தால் தீர்மானிக்கின்றது.

#### அட்டவணை

மத்திய மாகாணம், மாத்தளை மாவட்டம், மாத்தளை தெற்கு கம்பஹாசிய பத்துவே மாத்தளை பிரதேச செயலாளர் பிரிவின் மற்றும் பிரதேச சபை எல்லைகளுக்குள் கிரிகல்பொத்த கிராம அலுவலர் பிரிவின் அலுவிஹாரையில் அமைந்த "பீரிதாவெல எஸ்ட்டேட்டின் ஒரு பகுதி" என்றழைக்கப்படும் காணிக்கு உத்தரவுபெற்ற நில அளவையாளர் எம். ராஜசேக்கரன் என்பவரால் தயாரிக்கப்பட்ட 1994, யூன் 26 ஆந் திகதியிடப்பட்ட இல.7986 எனும் வரைபடத்தில் காட்டப்பட்ட அனைத்தும் பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்டு லொட் 1 எனக் குறிடப்பிடப்பட்ட காணியின் எல்லைகளாவன - வடக்கு : வடிவேல் என்பவர் உரிமம் கோரும் இதே காணியின் ஒரு பகுதி ; கிழக்கு : வடிவேல் என்பவர் உரிமம் கோரும் இதே காணியின் ஒரு பகுதி ; தெற்கு: பிரவேசம் (12 அடி அகல வீதி) மற்றும் மேற்கு : லொட் 2, ஆகிய இவ் எல்லைகளுக்குள் அமைந்த காணியின் விஸ்தீரணம் முப்பத்தி ஒன்று தசம் ஐந்து பேர்ச் (0ஏ. 0றூ. 31.5பே.) விஸ்தீரணத்தைக் கொண்ட காணியுடன் அங்கு அமைந்த அனைத்தும் நிலம், மரங்கள், பயிர்கள், கட்டடங்களுடன் மற்றும் அதன்கண் அமைந்த அனைத்துமுடன் கூறப்பட்ட இல. 7986 எனும் வரைபடத்திற்கு அமைவாக மாத்தளை காணிப் பதிவு அலுவலகத்தில் A 170/112 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

கூறப்பட்ட இல. 7986 எனும் வரைபடத்தில் காட்டப்பட்ட 12 அடி அகல வீதியினூடாக மற்றும் அதன்மீதும் அதன் கீழும் பிரவேசிப்பதற்கான மார்க்க உரிமைகளுடனானது.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

கம்பனிச் செயலாளர்.

06-220/2

---

## சம்பத் வங்கி பீஎல்சீ

(முன்பு சம்பத் வங்கி லிமிடெட் என அழைக்கப்பட்டது)

### 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 09 ஆம் பிரிவின் கீழான விற்பனை அறிவித்தல்

டபிள்யூ.ஆர். குணரத்ன
கணக்கு இல.: 0145 5000 3776

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 04ஆம் பிரிவின் கீழ் சம்பத் வங்கி பீஎல்சீ பணிப்பாளர் சபையினால் 2020.10.29ஆந் திகதி நடைபெற்ற கூட்டத்தில்

நிறைவேற்றப்பட்ட தீர்மானத்திற்கு அமைவாக 2021.01.22ஆந் திகதிய இலங்கை வர்த்தமானியிலும் (Gazette) 2021.01.13ஆந் திகதிய "திவயின" (Divaina), "ஐலண்ட்" (Island), "தினக்குரல்" (Thinakkural) ஆகிய பத்திரிகைகளில் வெளியிடப்பட்ட அறிவித்தல்களுக்கிணங்க நிலுவை முதலான எழுபத்தி ஆறு இலட்சத்து முப்பத்தி நான்காயிரத்து இருநூற்று தொண்ணூற்றி எட்டு ரூபா பன்னிரெண்டு சதம் (ரூபா 76,34,298.12) 2020,செத்தெம்பர் 24 ஆந் திகதி முதல் அறவிடப்பட வேண்டிய மொத்தத் தொகையைச் செலுத்தித் தீர்க்கும் திகதி வரை எழுபது இலட்சத்து பதினோராயிரத்து தொள்ளாயிரத்து எழுபது ரூபா (ரூபா 70,11,970.00) இத்துடன் மேலதிக வட்டியாக ஆண்டொன்றுக்கு பதின் மூன்று தசம் ஐந்து வீதம் (13.5%) வருமதியாகவுள்ள வட்டியுடன், விளம்பரச் செலவுகள், ஏனைய செலவுகள், ஏதேனும் கட்டணங்கள் செலுத்தப்பட்டிருப்பின் அவற்றையும் கழித்து அறவிட்டுக் கொள்வதற்கு கூறப்பட்ட ஈட்டு முறி இலக்கங்கள் 2442 மற்றும் 2926 இன் மீது பிணையாக வைக்கப்பட்டுள்ள சொத்துக்கள், நிலமனைகளின் குத்தகை உரிமைகளை கொழும்பு உத்தரவுபெற்ற ஏலதாரர்களான பீ. கே. ஈ. சேனாபத்தி என்பவர்கள் மூலமாக 2023.07.08 ஆந் திகதி மு.ப. 11.00 மணி முதல் அதே இடத்தில் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும்.

### மேற்குறிப்பீடு செய்யப்பட்ட அட்டவணை

ஊவா மாகாணம், மொணராகலை மாவட்டம், புத்தள கோரளே புத்தள பிரதேச சபை எல்லைகளுக்குள் மற்றும் பிரதேச செயலாளர் பிரிவின் யுத்தகனவ கிராம அலுவலர் பிரிவின் பில்லேவல கிராமத்தில் அமைந்த "பொல்வத்த எனும் பெலவத்த" என்றழைக்கப்படும் காணிக்கு உத்தரவுபெற்ற நில அளவையாளர் டீ. எஸ். ஏ. ரன்ஞன என்பவரால் தயாரிக்கப்பட்ட 2016, யூலை 03ஆந் திகதியிடப்பட்ட இல. 2422 எனும் வரைபடத்தில் அனைத்தும் பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்டு லொட் J எனக் குறிப்பிடப்பட்ட காணியின் எல்லைகளாவன: வடக்கு: லொட் H ; கிழக்கு : லொட் K ; தெற்கு: FVP 678 இன் லொட் 165 மற்றும் மேற்கு: லொட் H, ஆகிய இவ் எல்லைகளுக்குள் அமைந்த காணியின் விஸ்தீரணம் ஐந்து தசம் ஒன்பது பேர்ச் (0ஏ.0றூ.5.9பே.) விஸ்தீரணத்தைக் கொண்ட காணியுடன் அங்கு அமைந்த அனைத்தும், நிலம், மரங்கள், பயிர்கள், கட்டடங்களுடன் அதன்கண் அமைந்த அனைத்துமுடன் கூறப்பட்ட இல. 2422 எனும் வரைபடத்திற்கு அமைவானதாகும்.

**கூறப்பட்ட லொட் J கீழே விபரிக்கப்பட்ட காணியின் மீள் அளவீடாகும் :**

ஊவா மாகாணம், மொணராகலை மாவட்டம், புத்தள கோரளே புத்தள பிரதேச சபை எல்லைகளுக்குள் மற்றும் பிரதேச செயலாளர் பிரிவின் யுத்தகனவ கிராம அலுவலர் பிரிவின் பில்லேவல கிராமத்தில் அமைந்த "பொல்வத்த எனும் பெலவத்த" என்றழைக்கப்படும் காணிக்கு உத்தரவுபெற்ற நில அளவையாளர் ரீ. பீ. அத்தநாயக்க என்பவரால் தயாரிக்கப்பட்ட 1998,யூன் 08ஆந்திகதியிடப்பட்ட இல.7412 எனும்வரைபடத்தில் அனைத்தும் பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்டு லொட் 05 எனக் குறிப்பிடப்பட்ட காணியின் எல்லைகளாவன: வடக்கு: லொட் 04 ; கிழக்கு : ஈ. எம். தர்மதாச உரிமம் கோரும் இக்காணியின் எஞ்சிய பகுதி ; தெற்கு: வெள்ளவாய புத்தள பிரதான வீதிக்கான ஒதுக்கம் மற்றும் மேற்கு: லொட் 04, ஆகிய இவ் எல்லைகளுக்குள் அமைந்த காணியின் விஸ்தீரணம் ஐந்து தசம் ஒன்பது பேர்ச் (0ஏ.0றூ.5.9பே.) விஸ்தீரணத்தைக் கொண்ட காணியுடன் அங்கு அமைந்த அனைத்தும், நிலம், மரங்கள், பயிர்கள், கட்டடங்களுடன் அதன்கண் அமைந்த அனைத்துமுடன் கூறப்பட்ட இல. 7412 எனும் வரைபடத்திற்கு அமைவாக மொணராகலை காணிப் பதிவகத்தில் பரிமாணம்/ பக்கம் J 08/ 87 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

கம்பனிச் செயலாளர்.

06- 220/3

---

### சம்பத் வங்கி பீஎல்சீ

(முன்பு சம்பத் வங்கி லிமிடெட் என அழைக்கப்பட்டது)

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 09 ஆம் பிரிவின் கீழான விற்பனை அறிவித்தல்

உதய பிளாண்டேஷன் இன்ஜினேரிங் (பிரைவெட்) லிமிட்டெட்
கணக்கு இல.: 0101 1000 0370/1001 1379 3817

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 04ஆம் பிரிவின் கீழ் சம்பத் வங்கி பீஎல்சீ பணிப்பாளர் சபையினால் 2020.09.24ஆந் திகதி நடைபெற்ற கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்திற்கு அமைவாக 2021.02.25ஆந் திகதிய இலங்கை வர்த்தமானியிலும் (Gazette) 2021.03.05ஆந் திகதிய "திவயின" (Divaina), "ஐலண்ட்" (Island), "தினக்குரல்" (Thinakkural) ஆகிய பத்திரிகைகளில் வெளியிடப்பட்ட அறிவித்தல்களுக்கிணங்க நிலுவை முதலான ஒரு கோடியே எழுபத்தி ஐந்து இலட்சத்து தொண்ணூறாயிரத்து இருநூற்று எண்பத்தி எட்டு ரூபா நாற்பத்தி நான்கு சதம் (ரூபா 1,75,90,288.44) 2020, செத்தெம்பர் 07 ஆந் திகதி முதல் அறவிடப்பட வேண்டிய மொத்தத் தொகையைச் செலுத்தித் தீர்க்கும் திகதி வரை ஒரு கோடியே எழுபது இலட்சத்து மூவாயிரத்து தொள்ளாயிரத்து எழுபத்தி மூன்று ரூபா நான்கு சதம் (ரூபா 1,07,03,973.04) இத்துடன் மேலதிக வட்டியாக ஆண்டொன்றிற்கு பதின் ஆறு தசம் ஐந்து வீதம் (16.5%) மேலும் முப்பத்தி இரண்டு இலட்சம் ரூபா (ரூபா 32,00,000.00) இத்துடன் மேலதிக வட்டியாக ஆண்டொன்றுக்கு பதின் ஐந்து வீதம் (15%) வருமதியாகவுள்ள வட்டியுடன், விளம்பரச் செலவுகள், ஏனைய செலவுகள், ஏதேனும் கட்டணங்கள் செலுத்தப்பட்டிருப்பின் அவற்றையும் கழித்து அறவிட்டுக் கொள்வதற்கு கூறப்பட்ட ஈட்டு முறி இல. 2236 இன் மீது பிணையாக வைக்கப்பட்டுள்ள சொத்துக்கள், நிலமனைகளை கொழும்பு உத்தரவுபெற்ற ஏலதாரர்களான பீ. கே. ஈ. சேனாபத்தி என்பவர்கள் மூலமாக 2023.07.25 ஆந் திகதி மு.ப. 11.00 மணி முதல் அதே இடத்தில் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும்.

## அட்டவணை

1. மத்திய மாகாணம், கண்டி மாவட்டம், உடுநுவர கங்கபலாத்த கோரளே, உடுநுவர பிரதேச சபை எல்லைக்குள் உட அலுதெனியவில் அமைந்த "மல்வத்தகொடஹேன" என்றழைக்கப்படும் காணிக்கு உத்தரவுபெற்ற நில அளவையாளர் எஸ். பீ. எச். தென்னகோன் என்பவரால் தயாரிக்கப்பட்ட 2007, மே 23 ஆந் திகதியிடப்பட்ட இல. 1561 எனும் வரைபடத்தில் காட்டப்பட்ட அனைத்தும் பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்டு லொட் 2 எனக் குறிப்பிடப்பட்ட காணியின் எல்லைகளாவன: வடக்கு: மல்வத்தகொடஹேன இன் எஞ்சிய பகுதியின் ஒரு பிரதேசத்தை நிர்மாணிக்கும் லொட்கள் 8,9,10 மற்றும் 11; கிழக்கு: மல்வத்தகொடஹேனயின் எஞ்சிய பகுதி இல. 490/88 ஏற்ற வரைபடத்தின் லொட் 2; தெற்கு: லொட் 3 மற்றும் வெலிகல்ல முதல் முருத்தகாஹாமுல வரையான வீதி மற்றும்; மேற்கு : இல. 1561 எனும் வரைபடத்தில் லொட் 6 எனக் குறிப்பிடப்பட்ட பிரவேச மார்க்கம் ஆகிய இவ் எல்லைக்குள் அமைந்த காணியின் விஸ்தீரணம்: இரண்டு றூட்கள் மற்றும் ஆறு தசம் ஐந்து பேர்ச் (0ஏ.2றூ.6.5பே.) விஸ்தீரணத்தைக் கொண்ட காணியுடன் அங்கு அமைந்த அனைத்தும் நிலம், மரங்கள், பயிர்கள், கட்டடங்களுடன் அதன்கண் அமைந்த அனைத்துமுடன் கூறப்பட்ட இல.1561 எனும் வரைபடத்திற்கு அமைவாக கண்டி காணிப்பதிவகத்தில் பரிமாணம் / பக்கம் C 426/198 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

2. கூறப்பட்ட பிரதேச செயலாளர் பிரிவின் சிங்ஹபிடிய கிராம அலுவலர் பிரிவின் அலுதெனியவில் அமைந்த "மல்வத்தகொடஹேன" என்றழைக்கப்படும் காணிக்கு உத்தரவுபெற்ற நில அளவையாளர் எஸ். பீ. எச். தென்னகோன் என்பவரால் தயாரிக்கப்பட்ட 2007, மே 23 ஆந் திகதியிடப்பட்ட இல. 1561 எனும் வரைபடத்தில் காட்டப்பட்ட அனைத்தும் பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்டு லொட் 4 மற்றும் 5 எனக் குறிப்பிடப்பட்ட காணியின் எல்லைகளாவன: வடக்கு: வெலிகள்ள முதல் முருத்தாஹாமுள வரையான வீதி; கிழக்கு மற்றும் தெற்கு: குபல் அக கும்புர; மேற்கு: வெலிகள்ள முதல் முருத்தாஹாமுள வரையான வீதி, ஆகிய இவ் எல்லைக்குள் அமைந்த காணியின் விஸ்தீரணம்: பதினொன்று தசம் மூன்று பேர்ச் (0ஏ.0றூ.11.3பே.) விஸ்தீரணத்தைக் கொண்ட காணியுடன் அங்கு அமைந்த அனைத்தும் நிலம், மரங்கள், பயிர்கள், கட்டடங்களுடன் அதன்கண் அமைந்த அனைத்துமுடன் கூறப்பட்ட இல.1561 எனும் வரைபடத்திற்கு அமைவாக கண்டி காணிப்பதிவகத்தில் பரிமாணம் / பக்கம் C426/266 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

கம்பனிச் செயலாளர்.

06-220/4

## இலங்கை வங்கி

1968 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்கச் சட்டத்தாலும் 1974ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க அதிகாரச் சட்டத்தாலும் திருத்தப்பட்டவாறான இலங்கை வங்கிக் கட்டளைச் சட்டத்தின் (397 ஆம் அத்தியாயம்) 22ஆம் பிரிவின் கீழ் வெளியிடப்படும் ஏல விற்பனை அறிவித்தல்

நிரந்தர மேலதிகப் பற்று தொடர்பு இல.: 8816439

கொச்சிக்கடை, பல்லன்சேனை வடக்கு, இல. 88/2 என்னும் முகவரியைச் சேர்ந்த திரு. மில்லாவ தந்திரிகே சுஜித பிரியந்த அப்புஹாமி ஈடுவைத்த ஆதனத்தின் விற்பனை.

இலங்கை வங்கிக் கட்டளைச் சட்டம் 19 ஆம் பிரிவின் கீழ் இலங்கை வங்கிப் பணிப்பாளர்கள் சபை எடுத்த தீர்மானத்துக்கமைய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 2019.08.09ஆந் திகதிய 2136ஆம் இலக்க வர்த்தமானியிலும் 2019.07.29ஆந் திகதிய "தினமின", "டெய்லிநியுஸ்"மற்றும் "தினகரன்" ஆகிய பத்திரிகைகளிலும் வெளியிடப்பட்ட அறிவித்தல்களுக்கமைய நிலுவை முதலையும் விற்பனைத் திகதி வரை வருமதியாக உள்ள வட்டியையும் மேற்குறிப்பிட்ட கட்டளைச் சட்டத்தின் பிரிவு 26 இன் கீழ் அறவிட வேண்டிய செலவு மற்றும் பணங்களையும் அறவிடும் பொருட்டு இங்கு கீழ் அட்டவணையில் விபரித்த சொத்தையும் நிலமனையையும் இல.50/3, விஹார மாவத்தை, கொலன்னாவ எனும் முகவரியைச் சேர்ந்த திருவாளர்கள் T&H ஒக்ஷன்ஸ் ஏல நிறுவனத்தின் ஏலதாரர் திரு. துசித கருணாரத்ன அவர்கள் 1 ஆவது ஆதனத்தை 2023.07.13ஆந் திகதி மு.ப. 10.30 மணிக்கும் 2 ஆவது ஆதனத்தை 2023.07.13 ஆந் திகதி மு.ப. 11.30 மணிக்கும் அதே இடத்தில் வைத்து பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்வாரென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

### முதலாவது அட்டவணை

1. மேல் மாகாணம், கம்பஹா மாவட்டம், அலுத்குரு கோரளை, துனகஹபற்றுவில் கட்டான பிரதேச செயலகப் பிரிவில் கட்டான பிரதேச சபை எல்லைகளில் வெலிஹேன வடக்கு 77 ஆம் குறியீட்டு இலக்க கிராம அலுவலர் பிரிவில் வெலிஹேன கிராமத்தில் அமைந்த "தவட்டகஹவத்த" என அழைக்கும் காணி உத்தரவுபெற்ற நில அளவையாளர் எம். ரீ. எஸ். டீ. பெரேரா தயாரித்த 2012.07.15 ஆந் திகதியிட்ட வரைபட இல. 426 இல் துண்டு 3 என அடையாளமிட்ட பிரிக்கப்பட்ட குறித்த காணித்துண்டு- வடக்கு : ஜொசபின் சிவப்புள்ளேயின் காணியும்; கிழக்கு : சித்ரா பெர்னாண்டோபுள்ளேயின் காணியும் ; தெற்கு: சீ. சிவபுள்ளேயின் காணியும் ; மேற்கு : துண்டு 2 மற்றும் 1 உம் எல்லைகளாகக் கொண்டு பத்து பேர்ச்சுகள் (0ஏ. 0றூ. 10பே.) விஸ்தீரணமுடைய காணியும் அங்கு அமைந்துள்ள சகலதும் ஆகும். இது நீர்கொழும்பு காணிப்பதிவகத்தில் H 140/05 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

2. மேல் மாகாணம், கம்பஹா மாவட்டம், அலுத்குரு கோரளை, துனகஹபற்றுவில் நீர்கொழும்பு பிரதேச செயலாளர் பிரிவில் நீர்கொழும்பு மாநகர சபை எல்லைகளுள் பல்லன்சேன வடக்கு கிராம அலுவலர் பிரிவு குறியீட்டு இல. 76 இல் பல்லன்சேன வடக்கில் அமைந்த "மொலவத்த" என அழைக்கப்படும் காணி, உத்தரவுபெற்ற நில அளவையாளர் டபிள்யூ. எஸ். எஸ். பெரேரா தயாரித்த 2006.12.20 ஆந் திகதியிட்ட வரைபடம் இல. 5755 இல் துண்டு 5 என அடையாளமிட்ட பிரிக்கப்பட்ட குறித்த காணித்துண்டு- வடக்கு : துண்டு 4 உம் ; தென்கிழக்கு : போருதொட்ட பாதையும் ; தென்மேற்கு : துண்டு 6 உம் ; வடமேற்கு: துண்டு 1 உம் எல்லைகளாகக் கொண்டு இரண்டு தசம் ஒன்று ஐந்து பேர்ச் (0ஏ. 0றூ. 2.15பே.) விஸ்தீரணமுடைய காணியும் அங்கு அமைந்துள்ள சகலதும் ஆகும். இது நீர்கொழும்பு காணிப்பதிவகத்தில் E 966/214 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

### இரண்டாவது அட்டவணை

மேல் மாகாணம், கம்பஹா மாவட்டம், அலுத்குரு கோரளை, துனகஹபற்றுவில் கட்டான பிரதேச செயலகப் பிரிவில் கட்டான பிரதேச சபை எல்லைகளில் வெலிஹேன வடக்கு கிராம அலுவலர் பிரிவு குறியீட்டு இல. 77 இல் வெலிஹேன கிராமத்தில் அமைந்த "தவட்டகஹவத்த" என அழைக்கும் காணி உத்தரவுபெற்ற நில அளவையாளர் எம். ரீ. எஸ். டீ. பெரேரா தயாரித்த 2012.07.15 ஆந் திகதியிட்ட வரைபட இல. 426 இல் துண்டு 1 என அடையாளமிட்ட பிரிக்கப்பட்ட குறித்த காணித்துண்டு- வடக்கு : ஏ. என். ஏ. மல்லிகாவின் காணியும், ஜொசபின் சிவபுள்ளேயின் காணியும் ; கிழக்கு : துண்டு 3 உம் ; தெற்கு : துண்டு 2 உம் ; மேற்கு : பிரதேச சபைப் பாதையும் எல்லைகளாகக் கொண்டு மூன்று தசம் ஐந்து சைபர் பேர்ச் (0ஏ. 0றூ. 3.50பே.) விஸ்தீரணமுடையது. பொதுவழிப் பாதையொன்றாக உபயோகிப்பதற்கு உரிமையும் ஆகும். இது நீர்கொழும்பு காணிப்பதிவகத்தில் H 140/06 இல் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

இலங்கை வங்கிப் பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

(திருமதி) டபிள்யூ. கே.வீ.என்.பெர்ணாண்டோ,
முகாமையாளர்.

இலங்கை வங்கி,
வைக்கால்.

உரிமைப் பத்திரங்களை பரிசோதிப்பதற்கு ஏலதாரருக்கு அனுமதி வழங்கப்படும் என்பதோடு, முகாமையாளர், இலங்கை வங்கி, வைக்கால் கிளை எனும் தொலைபேசி இலக்க 031-2277280 இன் ஊடாக மேற்குறிப்பிட்ட சொத்துக்களுடன் தொடர்புடைய பிற ஆவணங்கள் தொடர்பாகவும் அறிந்து கொள்ளலாம்.

06-213

## இலங்கை வங்கி

### 1968 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்கச் சட்டத்தாலும் 1974ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க அதிகாரச் சட்டத்தாலும் திருத்தப்பட்டவாறான இலங்கை வங்கிக் கட்டளைச் சட்டத்தின் (397 ஆம் அத்தியாயம்) 22ஆம் பிரிவின் கீழ் வெளியிடப்படும் ஏல விற்பனை அறிவித்தல்

கடன் தொடர்பு இலக்கம்: 8756, 6797253.

இல.25/3, குணசேகர காடின்ஸ், நாவல வீதி, ராஜகிரிய என்ற முகவரியிலுள்ள ஹன்ச டிராவல்ஸ் அன்ட் ருவஸ் நிறுவனத்தின் கடன் பொறுப்புகளுக்காக இல. 263/1, கோவில் வீதி, தலப்பத்பிட்டிய, மஹரகம என்ற முகவரியிலுள்ள ஈடுவைக்கப்பட்ட ஆதனத்தின் விற்பனை.

இலங்கை வங்கிக் கட்டளைச் சட்டம் 19 ஆம் பிரிவின் கீழ் இலங்கை வங்கிப் பணிப்பாளர்கள் சபை எடுத்த தீர்மானத்துக்கமைய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 2022.07.01ஆந் திகதிய 2287ஆம் இலக்க வர்த்தமானியிலும் 2022.06.17ஆந் திகதிய "தினமின", "டெய்லிநியுஸ்"மற்றும் "தினகரன்" ஆகிய பத்திரிகைகளிலும் வெளியிடப்பட்ட அறிவித்தல்களுக்கமைய நிலுவை முதலையும் விற்பனைத் திகதி வரை செலுத்த வேண்டியுள்ள வட்டியையும் மேற்குறிப்பிட்ட கட்டளைச் சட்டத்தின் பிரிவு 26 இன் கீழ் அறவிட வேண்டிய செலவு மற்றும் பணங்களையும் அறவிடும் பொருட்டு இங்கு கீழ் அட்டவணையில் விபரித்த ஆதனங்களையும் நிலமனைகளையும் இல.50/3, விஹார மாவத்தை, கொலன்னாவ எனும் முகவரியைச் சேர்ந்த திருவாளர்கள் M/S.T&H ஒக்ஷன்ஸ் ஏல நிறுவனத்தின் ஏலதாரர் திரு. எம்.எச்.ரி. கருணாரத்ன அவர்கள் 2023.07.11ஆந் திகதி மு.ப. 10.30 மணிக்கு அதே இடத்தில் வைத்து பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்வாரென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

### முதலாம் அட்டவணை

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், சல்பிட்டி கோரளை, பள்ளே பற்று, மஹரகம கொழும்பு - மஹரகம பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட 525 - தலப்பத்பிட்டிய கிராம அலுவலர் பிரிவில் 263/1, தலப்பத்பிட்டிய கோவில் வீதி என்ற வரி மதிப்பீட்டு இலக்கத்துடன் மரங்கள், பயிர்கள் என அனைத்தையும் கொண்டு தலபத்பிட்டியவில் அமைந்துள்ள "கொடபொரகஹலந்த" என அழைக்கப்படும் காணியின் உரிமம் பெற்ற நில அளவையாளர் என். அபேசிறி தயாரித்த 2004, நவெம்பர் 08 ஆந் திகதிய 2004/97 ஆம் இலக்க வரைபடத்தில் விபரிக்கப்பட்டுள்ள பிரிக்கப்பட்டதும் எல்லை நிர்ணயிக்கப்பட்டதுமான காணித் துண்டு 01 என அடையாளமிடப்பட்ட காணி குறித்த வரைபடத்தின்படி - வடக்கு: 263/2, தலபத்பிட்டிய கோவில் வீதி என்ற வரி மதிப்பீட்டு இலக்கத்தைக் கொண்ட கட்டடங்களையும் (உரிமம் பெற்ற நில அளவையாளர் ஓ. எஸ். ரணசிங்க தயாரித்த 1982.09.28 ஆந் திகதியிட்ட 566 ஆம் இலக்க வரைபடத்தில் காணித்துண்டு 1C எனக் குறிப்பிடப்பட்டுள்ளது); கிழக்கு: 15 அடி அகலங்கொண்ட பாதையையும் (குறித்த 566 ஆம் இலக்க

வரைபடத்தில் காணித்துண்டு 1E எனக் குறிப்பிடப்பட்டுள்ளது); தெற்கு: 15 அடி அகலங்கொண்ட பாதையையும் (குறித்த 566 ஆம் இலக்க வரைபடத்தில் காணித்துண்டு 1E எனக் குறிப்பிடப்பட்டுள்ளது) 263/1A , தலப்பத்பிட்டிய கோவில் வீதி என்ற வரி மதிப்பீட்டு இலக்கத்தைக் கொண்ட கட்டடங்களையும் (உரிமம் பெற்ற நில அளவையாளர் டி. டப்ளியூ. அபேசிங்க தயாரித்த 1994.10.25 ஆந் திகதியிட்ட 2378A என்ற இலக்கத்தைக் கொண்ட வரைபடத்தில் காணித்துண்டு A2 எனக் குறிப்பிடப்பட்டுள்ளது) வடிகால் அமைப்பையும் முன்னர் என். ஈ. பெரேராவுக்கும் இப்போது அல்விசுக்கும் சொந்தமாகவுள்ள காணியையும்; மேற்கு: உரிமம் பெற்ற நில அளவையாளர் ஓ. எஸ். ரணசிங்க தயாரித்த 1982.09.27 ஆந் திகதியிட்ட 565 ஆம் இலக்க வரைபடத்தில் குறிப்பிடப்பட்டுள்ள காணித்துண்டு 2 ஐயும் எல்லைகளாகக் கொண்டுள்ளதோடு இருபது தசம் ஐந்து ஒன்று பேர்ச்சுகள் (00ஏ. 00றூ. 20.51பே.) அல்லது பூச்சியம் தசம் பூச்சியம் ஐந்து ஒன்று ஒன்பது ஹெக்டயார் (ஹெக். 0.0519) பரப்பளவையும் கொண்டுள்ளது.

காணித்துண்டு 1 என்று அடையாளப்படுத்தப்பட்ட குறித்த காணியானது கீழே விபரிக்கப்பட்டுள்ள காணியின் மீளளவையாகும்.

263/ 1, தலப்பத்பிட்டிய கோவில் வீதி என்ற வரி மதிப்பீட்டு இலக்கத்துடன் மரங்கள், பயிர்கள் என அனைத்தையும் கொண்டு தலப்பத்பிட்டியவில் அமைந்துள்ள "கொடபொரகஹலந்த" என அழைக்கப்படும் காணியின் 566 ஆம் இலக்க வரைபடத்தில் விபரிக்கப்பட்டுள்ள பிரிக்கப்பட்டதும் எல்லை நிர்ணயிக்கப்பட்டதுமான காணித்துண்டு 1D என அடையாளமிடப்பட்ட காணி குறித்த வரைபடத்தின்படி - வடக்கு: காணித்துண்டு 1C ஐயும்; கிழக்கு: காணித்துண்டு 1E ஐயும் (15 அடி அகலங்கொண்ட பாதைக்கான ஒதுக்கம்); தெற்கு: காணித்துண்டு 1E ஐயும் ஜி. டி. நந்தவதீ என்பவருக்கும் திரு. பெரேராவின் வாரிசுகளுக்கும் சொந்தமான ஆதனத்தையும்; மேற்கு: அதே காணியின் காணித்துண்டு 2 ஐயும் எல்லைகளாகக் கொண்டுள்ளது. இருபது தசம் ஒன்று பூச்சியம் பேர்ச்சுகள் (00ஏ. 00றூ. 20.10பே.) பரப்பளவைக் கொண்டுள்ள இக்காணி தெல்கந்த காணிப்பதிவகத்தில் B 199/ 75 என்ற இலக்கத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது."

**இரண்டாம் அட்டவணை**

1. மேற்குறிப்பிட்டவாறு தலப்பத்பிட்டியவில் அமைந்துள்ள "கொடபொரகஹலந்த" என அழைக்கப்படும் காணியின் உரிமம் பெற்ற நில அளவையாளர் ஓ. எஸ். ரணசிங்க தயாரித்த 1982.09.28 ஆந் திகதியிட்ட 566 ஆம் இலக்க வரைபடத்தில் விபரிக்கப்பட்டுள்ள பிரிக்கப்பட்டதும் எல்லை நிர்ணயிக்கப்பட்டதுமான காணித்துண்டு 1E (15அடி அகலங்கொண்ட பாதைக்கான ஒதுக்கம்) என அடையாளமிடப்பட்ட காணி வடக்கு: காணித்துண்டு 1A, 1D என்பவற்றையும்; கிழக்கு: எம். அல்பிரட் பெரேரா என்பவரின் ஆதனத்தையும்; தெற்கு: ஜி. டி. சுமணபால என்பவருக்குச் சொந்தமான ஆதனத்தையும் உரிமம் பெற்ற நில அளவையாளர் சி. சி. விக்கிரமசிங்க தயாரித்த 1974.08.17 ஆந் திகதியிட்ட 1604 ஆம் இலக்க வரைபடத்தில் குறிப்பிடப்பட்டுள்ள காணித்துண்டு 04 ஐயும் ஜி. டி. நந்தவதீ என்பவருக்கும் திரு. பெரேராவின் வாரிசுகளுக்கும் சொந்தமானஆதனத்தையும்; மேற்கு: காணித்துண்டு 1D, 1C, 1B என்பவற்றையும் எல்லைகளாகக் கொண்டுள்ளது. குறித்த 566 ஆம் இலக்க வரைபடத்தின்படி பதினொன்று தசம் ஐந்து ஐந்து பேர்ச்சுகள் (00ஏ.00றூ.11.55பே.) பரப்பளவையும் அதன்கண் காணப்படும் அனைத்தையும் கொண்டுள்ள இக்காணி தெல்கந்த காணிப்பதிவகத்தில் B 199/ 77 என்ற இலக்கத்தில் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

1. மேற்குறிப்பிட்டவாறு தலப்பத்பிட்டியவில் அமைந்துள்ள "மதட்டியகஹவத்த" என அழைக்கப்படும் காணியின் நில அளவையாளர் சி. சி. விக்கிரமசிங்க தயாரித்த 1974.08.17 ஆந் திகதியிட்ட 1604 ஆம் இலக்க வரைபடத்தில் விபரிக்கப்பட்டுள்ள பிரிக்கப்பட்டதும் எல்லை நிர்ணயிக்கப்பட்டதுமான காணித்துண்டு 04 (10 அடி அகலங்கொண்ட பாதைக்கான ஒதுக்கம்) என அடையாளமிடப்பட்ட காணி - வடக்கு: ஜி. டி. ஜினரிஸ் என்பவருக்குச் சொந்தமான காணியையும்; கிழக்கு: காணித்துண்டுகள் 1, 2, 3 என்பவற்றையும்; தெற்கு: கிராம சபை வீதியையும் (தற்போது தலப்பத்பிட்டிய கோவில் வீதி என அழைக்கப்படுகிறது); மேற்கு: அதே காணியின் ஒரு பகுதியையும் எல்லைகளாகக் கொண்டுள்ளது. குறித்த 1604 ஆம் இலக்க வரைபடத்தின்படி ஒன்பது தசம் ஆறு பூச்சியம் பேர்ச்சுகள் (00ஏ. 00றூ. 9.60பே.) பரப்பளவையும் அதன்கண் காணப்படும் அனைத்தையும் கொண்டுள்ள இக்காணி தெல்கந்த காணிப்பதிவகத்தில் B 199/ 76 என்ற இலக்கத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

விலைகூறுவோர் மேற்கூறப்பட்டுள்ள ஆதனத்துடன் தொடர்புடைய உரிமைத்துவ உறுதிகளையும் அதனுடன் தொடர்புடைய ஏனைய ஆவணங்களையும் தலைநகரக் கிளையின் அறவிடல் மற்றும் கடன் மேற்பார்வை பிரிவின் சிரேஷ்ட முகாமையாளருடன் தொடர்பு கொண்டு பார்வையிட முடியும். தொடர்புகளுக்கு - 0112329087.

இலங்கை வங்கிப் பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

எஸ். எஸ். பி. ஏக்கநாயக்க,
முதுநிலை முகாமையாளர்
அறவிடல் மற்றும் கடன் மேற்பார்வை.

இலங்கை வங்கி,
தலைநகரக் கிளை.

06-214

---

**இலங்கை வங்கி**

1968 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்கச் சட்டத்தாலும் 1974ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க அதிகாரச் சட்டத்தாலும் திருத்தப்பட்டவாறான இலங்கை வங்கிக் கட்டளைச் சட்டத்தின் (397 ஆம் அத்தியாயம்) 22ஆம் பிரிவின் கீழ் வெளியிடப்படும் ஏல விற்பனை அறிவித்தல்

கடன் தொடர்பு இல.: 82321573.

இல.120, முரகல க்ரபிக்ஸ், குருநாகலை வீதி, ஜெயகங்கா சந்தி, தலாவை எனும் முகவரியைச் சேர்ந்த திரு. ரணசிங்ஹ

ஆராச்சிகே பியசேன மற்றும் திரு. ரத்னாயக்க ஆனந்த ரத்னாயக்க ஆகியோரின் பொறுப்புகளுக்காக இல. 120, முரகல, க்ரபிக்ஸ், குருநாகல் வீதி, ஜெயகங்கா சந்தி, தலாவை எனும் முகவரியைச் சேர்ந்த திரு.ரணசிங்ஹ ஆராச்சிகே பியசேன என்பவரினால் ஈடுவைக்கப்பட்ட ஆதனத்தின் விற்பனை.

இலங்கை வங்கிக் கட்டளைச் சட்டம் 19 ஆம் பிரிவின் கீழ் இலங்கை வங்கிப் பணிப்பாளர்கள் சபை எடுத்த தீர்மானத்துக்கமைய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 2023.03.03ஆந் திகதியன்றும் 2023.05.19 ஆந்திகதின்று வெள்ளிக்கிழமைகளில் முறையே 2322 மற்றும் 2333 ஆம் இலக்க வர்த்தமானியிலும் 2023.03.10ஆந் திகதி வெள்ளிக்கிழமை மற்றும் 2023.05.18 ஆந் திகதி வியாழக்கிழமை "டெய்லிநியுஸ்", "தினகரன்" மற்றும் "தினமின" ஆகிய பத்திரிகைகளிலும் வெளியிடப்பட்ட அறிவித்தல்களுக்கமைய நிலுவை முதலையும் விற்பனைத் திகதி வரை வருமதியாக உள்ள வட்டியையும் மேற்குறிப்பிட்ட கட்டளைச் சட்டத்தின் பிரிவு 26 இன் கீழ் அறவிட வேண்டிய செலவு மற்றும் பணங்களையும் அறவிடும் பொருட்டு இங்கு கீழ் அட்டவணையில் விபரித்த சொத்தையும் நிலமனையையும் இல.50/3, விஹார மாவத்தை, கொலன்னாவ எனும் முகவரியைச் சேர்ந்த T&H ஒக்ஷன்ஸ் ஏல நிறுவனத்தின் ஏலதாரர் திரு.துசித்த கருணாரத்ன அவர்கள் 2023.06.28ஆந் திகதி புதன்கிழமை மு.ப. 11.30 மணிக்கு அதே இடத்தில் வைத்து பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்வாரென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

**மேற்குறிப்பிட்ட முதலாவது அட்டவணை**

"அரச காணி" (கொட இடம)) என அழைக்கப்படும் காணியின் உரிமம் பெற்ற நில அளவையாளர் என்.பீ. ஏக்கநாயக்க தயாரித்த 2014.05.22 ஆந் திகதிய 1677 ஆம் இலக்க வரைபடத்தில் விபரிக்கப்பட்டுள்ள பிரிக்கப்பட்டதும் எல்லை நிர்ணயிக்கப்பட்டதுமான காணித்துண்டு 01 வடமத்திய மாகாணம், அநுராதபுரம் மாவட்டம், நுவரகம் பலாத கிழக்கு பிரதேச செயலகப் பிரிவில், அநுராதபுரம் மாநகர எல்லைக்குள், வன்னியகுளம கனாதர கோரளை, இல. 246 கிராம அலுவலர் பிரிவில் வன்னியாகுளம என்ற கிராமத்தில் அமைந்துள்ளது. இக்காணித்துண்டு 01 ஆனது - வடக்கு: இவ்வரைபடத்தில் 2 ஆம் இலக்கக் காணித்துண்டையும் ; கிழக்கு: இவ்வரைபடத்தில் 2 ஆம் இலக்கக் காணித்துண்டையும்; தெற்கு: F.V.P. 259 என்ற வரைபடத்தில் 647 ஆம் இலக்கக் காணித்துண்டையும்; மேற்கு: F.V.P. 259 என்ற வரைபடத்தில் 642 ஆம் இலக்கக் காணித்துண்டையும் (வீதி) எல்லைகளாகக் கொண்டுள்ளது. அங்குள்ள மரங்கள், தோட்டங்கள், கட்டடங்கள் மற்றும் அனைத்துடனும் இருபத்து மூன்று தசம் இரண்டு பூச்சியம் பேர்ச் (0ஏ.0றூ. 23.20பே.) அல்லது பூச்சியம் தசம் பூச்சியம் ஐந்து எட்டு ஏழு ஹெக்டயார் (0.0587 ஹெக்டயார்) பரப்பளவில் காணித்துண்டு 01 LDO 30/40 எனும் இலக்கத்தின் கீழ் அநுராதபுரம் மாவட்டக் காணிப் பதிவகத்தில் பதியப்பட்டுள்ளது.

மேற்குறிப்பிட்ட காணித்துண்டு 01 நில அளவை பணிப்பாளர் நாயகத்தினால் அங்கீகரிக்கப்பட்ட F.V.P. 259 என்ற வரைபடத்தில் 646 ஆம் இலக்கக் காணித்துண்டினது துணைப் பிரிவும் மீளளவையுமாகும். இது பின்வருமாறு விவரிக்கப்படுகிறது.

நில அளவைப் பணிப்பாளர் நாயகத்தினால் அங்கீகரிக்கப் பட்ட F.V.P. 259 என்ற வரைபடத்தில் விபரிக்கப்பட்டுள்ள பிரிக்கப்பட்டதும் எல்லை நிர்ணயிக்கப்பட்டதுமான "ரஜயே இடம" (கொட இடம) என அழைக்கப்படும் 646 ஆம் இலக்கக் காணித்துண்டானது வட மத்திய மாகாணம், அநுராதபுர மாவட்டம், நுவரகம் பலாத கிழக்கு பிரதேச செயலகப் பிரிவில், அநுராதபுரம் மாநகர எல்லைகளுள், வன்னியன்குளம கனாதர கோரளை, இல. 246 கிராம அலுவலர் பிரிவில் வன்னியன்குளம என்ற கிராமத்தில் அமைந்துள்ளது. மேற்குறிப்பிட்ட காணித்துண்டு 646 - வடக்கு: F.V.P. 259 என்ற வரைபடத்தில் 643,644, 645ஆம் இலக்க காணித்துண்டுகளையும்; கிழக்கு: F.V.P. 259 என்ற வரைபடத்தில் 645 ஆம் இலக்கக் காணித்துண்டையும்; தெற்கு: F.V.P. 259 என்ற வரைபடத்தில் 647 ஆம் இலக்கக் காணித்துண்டையும்; மேற்கு: F.V.P. 259 என்ற வரைபடத்தில் நாகசேன மாவத்தையின் ஒதுக்கத்தையும் எல்லைகளாகக் கொண்டுள்ளது. இக்காணித்துண்டு அங்குள்ள மரங்கள், தோட்டங்கள், கட்டடங்கள் மற்றும் அனைத்துடனும் பூச்சியம் தசம் ஒன்று பூச்சியம் மூன்று ஹெக்டேயார் (0.103 ஹெக்டயார்) பரப்பளவில் LDO D/15/46 எனும் இலக்கத்தின் கீழ் அநுராதபுரம் மாவட்டக் காணிப் பதிவகத்தில் பதியப்பட்டுள்ளது.

**ஒதுக்கங்கள்**

1. இக் காணியின் அல்லது அதற்கு மேலுள்ள கனிமங்கள் (இவ்வனுமதியில் விலைமதிப்பற்ற கல் எனக் குறிப்பிடப்படும்) அனைத்தினதும் உரிமையும் அத்தகையவற்றை தோண்டு வதற்கும், தேடுவதற்கும், அங்கு பணியாற்றுவதற்கும் மற்றும் எடுத்துச் செல்வதற்குமான உரிமையும் அரசுக்கே உரியதாகும்.

2. காணி உரிமையாளருக்கு காணிமீதுள்ள உரிமையானது இவ்வனுமதித்த திகதியில் தற்போதுள்ள எந்தவொரு வழி யுரிமைக்கும் அல்லது பிற சேவக உரிமைக்கும் உட்பட்டதாகும்.

**நிபந்தனைகள்**

1. 0.0253 ஹெக்டயார்/மேட்டுநிலம் ................... ஹெக்டயார்/ ஏக்கர் நீர்ப்பாசன நிலம் எனப்படும் இங்கு குறிப்பிடப்பட்டுள்ள துணைப்பிரிவின் அலகினை விட பரப்பளவில் குறைவான இக்காணியின் பிரிக்கப்பட்ட பங்கொன்றினை உரிமையாளர் விற்பனை செய்யக் கூடாது.

2. உரிமையாளர், இங்கு குறிப்பிடப்பட்டுள்ள 1/4 குறைந்த பட்சம் பகுதியைவிடக் குறைவான பங்கின் பிரிக்கப்படாத பங்கினை விற்பனை செய்யக்கூடாது. அதாவது-

3. நிபந்தனை 01 இல் குறிப்பிடப்பட்டுள்ள துணைப்பிரிவின் அலகினை விட பரப்பளவில் குறைவான இக்காணியின் பிரிக்கப்பட்ட பங்கொன்றிற்கு எந்தவொரு நபரும் உரிமையாளராகக் கூடாது.

4. நிபந்தனை 02 இல் குறிப்பிடப்பட்டுள்ள இக்காணியின் குறைந்தபட்சப் பகுதியை விடக் குறைவான பிரிக்கப்படாத பங்கொன்றிற்கு எந்தவொரு நபரும் உரிமையாளராக கூடாது.

5. இக்காணியோ அல்லது அதன் எந்தவொரு பகுதியோ நீர்ப்பாய்ச்சத்தகு பிரதேசமாகவிருப்பின் அல்லது உள்ளடக்கம் 6 ஏற்கனவே கட்டுமானத்தின்போது கட்டுப்பட்ட அல்லது இனிமேல் கட்டப்படவிருக்கும் நீர்ப்பாசனப் பணியின் போது நீர்ப்பாசனத்திற்கு உட்படுமாயின், உரிமையாளர் நீர்ப்பாசனப் பகுதியைப் பொறுத்து நீர்ப்பாசனக் கட்டளை (அத்தியாயம் 453) ஏற்பாடுகளுக்கும் அதன்கீழ் உருவாக்கப்பட்ட விதிகளுக்கும் இணங்க வேண்டும்.

6. அரச முகவரின் எழுத்துப்பூர்வமான அனுமதியையும் உரிய அதிகாரி சபையிடம் உரிமத்தினையும் பெற்றாலன்றி, உரிமையாளர் இக்காணியில் அல்லது அதன் உள்ளிருக்கும் கனிமங்களைத் தோண்டவோ, தேடவோ, எடுக்கவோ, உபயோகிப்படுத்தலோ, விற்கவோ இல்லையெனில் அப்புறப் படுத்தவோ கூடாது.

7. பிரதேச செயலாளரின் எழுத்துமூலமான முன் அனுமதி இன்றி காணியினது அல்லது அதன் எந்தவொரு பகுதியினதும் இயல்பினை மாற்றக் கூடாது.

ஏல விலை கூறுவோர் 025 2275090 என்ற தொலைபேசி இலக்கத்தின் ஊடாக தலாவை கிளையின் முகாமையாளரைத் தொடர்பு கொண்டு உரிமைப் பத்திரங்கள் மற்றும் மேற்கூறிய சொத்து தொடர்பான பிற ஆவணங்களை 2023, யூன் 12 ஆந் திகதியிலிருந்து பரிசோதிக்கலாம்.

இலங்கை வங்கிப் பணிப்பாளர் சபைக் கட்டளைப்படி,

செல்வி பீ. ஜீ. என். இரோஷனி,
முகாமையாளர்.

இலங்கை வங்கி,
தலாவைக் கிளை,
2023, மே 23.
06-215

---

## ஹற்றன் நெஷனல் வங்கி பீஎல்சீ - பதவி பராக்கிரமபுர கிளை

(முன்னர் வரையறுக்கப்பட்ட ஹற்றன் நெஷனல் வங்கி என அறியப்பட்டது)

### 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின்கீழ் நடைபெறும் ஏல விற்பனை

உரிமம் பெற்ற நில அளவையாளர் எச். எம். எஸ். ஹேரத்தினால் தயாரிக்கப்பட்ட 2007.01.14ஆந் திகதியிடப்பட்ட 3839ஏ ஆம் இலக்க வரைபடத்தில் விபரமாக விளக்கப்பட்டுள்ள காணித்துண்டுகள் 01, 03 மற்றும் 04 என அடையாளம் இடப்பட்ட வட மேல் மாகாணம், குருநாகல் மாவட்டத்தில் உள்ள உடபொல ஒத்தொட்ட கோறளை தம்பதெனி ஹத்பற்றுவில் உள்ள பொல்கஹவல பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள பொல்கஹாவல பிரதேச சபை எல்லைக்கு உட்பட்ட பொல்கஹாவல தெற்கு கிராம அலுவலர் பிரிவு இலக்கம் 938 இல் உள்ள கலபடகம கஹாதிவெலவில் உள்ள ஒரு றூட், மற்றும் பதினெட்டு தசம் எட்டு பேர்ச் (0ஏ. 1றூ. 18.8பே.) விஸ்தீரணத்துடனான கட்டடங்கள், பயிர்செய்கைகள் மற்றும் அத்துடனான சம்பந்தப்பட்ட எல்லாம்,

ஹற்றன் நெஷனல் வங்கி பீ எல் சீ தாபனத்தின் பெயருக்கு எழுதப்பட்ட, குருநாகல் பிரசித்த நொத்தாரிசு எஸ். பி. வந்துரகலவினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட, 2013, யூலை 29 ஆந் திகதியிடப்பட்ட 18571, மற்றும் 2014.10.31ஆந் திகதியிடப்பட்ட 19779 ஆகிய பிணை முறிகளின் கீழ் விக்கிரம ஆராச்சிகே ருவான் குமார மறுபெயர் விக்கிரம ஆராச்சிகே ருவன் குமார விக்கிரமாராச்சி என்பவர் கடப்பாடுடையவர்களாக, அடமானப் பத்திரத்தில் வழங்கப்பட்ட கடன் வசதிகளுக்காக செலுத்த வேண்டிய தொகையை செலுத்தவதில் தவறிழைத்துள்ளதால்,

ஹற்றன் நெஷனல் வங்கியால் எனக்களிக்கப்பட்ட அதிகாரத்தின் பிரகாரம், சொல்லப்பட்ட முறிகளின் கீழ் அறவிடப்பட வேண்டிய கடன் தொகை, சகல விதிப்பனவுகள் மற்றும் ஏல விற்பனைக் கட்டணங்கள் உட்பட சகல செலவுகளையும், அறவிடுவதற்காக இங்கு கீழ் விபரமாக குறிப்பிடப்பட்டுள்ள ஆதனம் காணி மற்றும் அதிலுள்ள மண், மரங்கள், பயிர்ச்செய்கைகள், கட்டிடங்கள் மற்றும் அத்துடனான எல்லாம்.

2023, யூலை மாதம் 11ஆந் திகதி மு.ப 9.00 மணிக்கு அதே இடத்தில் ஆரம்பிக்கும் பகிரங்க ஏலத்தில் என்னால் விற்பனை செய்யப்படும்.:

#### அட்டவணை

வட மேல் மாகாணம், குருநாகல் மாவட்டத்தில் உள்ள உடபொல ஒத்தொட்ட கோறளை தம்பதெனி ஹத்பற்றுவில் உள்ள பொல்கஹவல பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள பொல்கஹாவல பிரதேச சபை எல்லைக்கு உட்பட்ட பொல்கஹாவல தெற்கு கிராம அலுவலர் பிரிவு இலக்கம் 938 இல் உள்ள கலபடகம கஹாதிவெலவில் உள்ள உரிமம் பெற்ற நில அளவையாளர் எச். எம். எஸ். ஹேரத்தினால் தயாரிக்கப்பட்ட 2007.01.14ஆந் திகதியிடப்பட்ட 3839ஏ ஆம் இலக்க வரை படத்தில் விபரமாக விளக்கப்பட்டுள்ள காணித்துண்டுகள் 01, 03 மற்றும் 04 என அடையாளம் இடப்பட்ட கலஹிற்றியாவே வத்த என அழைக்கப்படும் அருகருகேயுள்ள பிரிக்கப்பட்ட மற்றும் வரையறுக்கப்பட்ட சொல்லப்பட்ட வரைபடத்திற்கு அமைவான சொல்லப்பட்ட காணித்துண்டுகள் 01, 03 மற்றும் 04 இன் எல்லைகள் - வடக்கு: காணித்துண்டு 02 மற்றும் கமநல சேவைகள் திணைக்களத்திற்கு சொந்தமான காணி; கிழக்கு: பாத்திமா ரிஸ்வியாவின் காணி மற்றும் ஈ. பீ. சோமபாலவின் காணி; தெற்கு: வரைபட இலக்கம் 3389 இல் உள்ள காணித்துண்டு 11 மற்றும் 05 (ஒற்றையடி பாதை) ; மேற்கு: வரைபட இலக்கம் 3889 இல் உள்ள காணித்துண்டு

12, வீதிக்கானது. ஒரு றூட், மற்றும் பதினெட்டு தசம் எட்டு பேர்ச் (0ஏ. 1றூ. 18.8பே.) விஸ்தீரணத்துடனான கட்டடங்கள், பயிர்செய்கைகள் மற்றும் அத்துடனான சம்பந்தப்பட்ட எல்லாம் அத்துடன், 3839 ஆம் இலக்க வரைபடத்தில் காணித்துண்டு 12 என அடையாளம் இடப்பட்ட வீதியை உபயோகிப்பதற்கான உரிமை, சொல்லப்பட்ட வரைபட இலக்கம் 3839ஏ இல் உள்ள காணித்துண்டுகள் 05 மற்றும் 02, பொது வழிக்கான உரிமை.

சொல்லப்பட்ட காணிகள், பின்னர் இணைக்கப்பட்டதுடன் நில அளவை செய்யப்பட்டு, உரிமம் பெற்ற நில அளவையாளர் எச். எம். எஸ். ஹேரத்தினால் தயாரிக்கப்பட்ட 2013.07.13 ஆந் திகதியிடப்பட்ட 9774 ஆம் இலக்க வரைபடத்தில் உள்ள காணித்துண்டு 01ஏ என விபரமாக விளக்கப்பட்டுள்ள கலஹிற்றியாவேவத்த என அழைக்கப்படும் காணி முன்சொல்லப்பட்ட கலபடம கஹாதிவெல, முன் சொல்லப் பட்டதன் காணித்துண்டு 01ஏ இன் எல்லைகள் - வடக்கு: காணித்துண்டு 1பி மற்றும் கமநல சேவைகள் திணைக்களத்திற்கு சொந்தமான காணி; கிழக்கு: பாத்திமா ரிஸ்வியாவின் காணி மற்றும் ஈ. பீ. சோமபாலவின் காணி; தெற்கு: வரைபட இலக்கம் 3839 ஆம் இலக்க வரைபடத்தில் உள்ள காணித்துண்டு 11, மற்றும் சொல்லப்பட்ட வரைபடத்தில் உள்ள காணித்துண்டு 1சி; மேற்கு: வரைபட இலக்கம் 3839 இல் உள்ள காணித்துண்டு 12, வீதிக்கானது. சொல்லப்பட்ட நில அளவைக்கு அமைவாக ஒரு றூட் மற்றும் பதினெட்டு தசம் எட்டு பேர்ச் (0ஏ. 1றூ. 18.8பே) விஸ்தீரணமானது.

**பணிப்பாளர் சபையின் தீர்மானம் முடிவு அறிவித்தல் கள்**.- 2018, யூன் 14 மற்றும் 2022, யூன் 17 ஆந் திகதியிடப்பட்ட இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியிலும், 2018, யூன் 19 மற்றும் 2022, யூன் 24 ஆந் திகதிகளில் பிரசுரிக்கப்பட்ட 'மவ்பிம', 'டெயிலி மிரர்' மற்றும் 'தினக்குரல்' ஆகிய பத்திரிகைகளையும் பார்க்கவும்.

**ஆதனத்திற்குப் பிரவேசிக்கும் வழி**.- பொல்கஹவெல நகரத்திலிருந்து (ரயில் நிலையம்) கேகாலை வீதியில் சுமார் 150 மீற்றர் தூரம் சென்று, மக்கள் வங்கிக் கிளைக்கு சற்று முன், தார் வீதிக்கு வலப்புறம் திரும்பி சுமார் 50 மீற்றர் தொடரவும். பின்னர் 12 அடி அகல சாலை முன்பதிவில் இடதுபுறம் திரும்பி சுமார் 30 மீற்றர் தூரம் சென்று சொத்தை அடையுங்கள். இது சாலையின் முடிவில் அமைந்துள்ளது.

**கட்டணங்கள் செலுத்தும் முறை** .- உத்தேசக் கொள்வனவாளர் ஏல முடிவில் பின்வரும் கட்டணங்களை பணமாக ஏலதாரருக்கு செலுத்த வேண்டும்:-

(1) கொள்வனவு விலையின் 10% ;
(2) உள்ளூராட்சி மன்ற வரி 1 %;
(3) ஏலதாரரின் தரகுப் பணம் 2.5% ;
(4) ஏலத்திற்காக செலவு செய்யப்பட்ட முழு விளம்பரச் செலவுகள்;
(5) இலிகிதர் மற்றும் கூவுவோர் கட்டணம் 2,000.00;
(6) விற்பனை நிபந்தனை உறுதிப்படுத்தலுக்கான நொத்தாரிசுக் கட்டணம் 2,000.00.

மேலும் கொள்வனவு தொகையில் மிகுதி 90% ஏலத் திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் ஹற்றன் நெஷனல் வங்கி பீஎல்சீக்கு செலுத்த வேண்டும்.மேற்குறிப்பிட்டவாறு மிகுதிப் பணம் குறிப்பிட்ட திகதிக்கு முன்னால் செலுத்தப்படாவிடத்து செலுத்திய பத்து வீத (10%) பணத்தை திருப்பித் தராமலிருப்பதற்கு அதே காணியை மறு ஏல விற்பனை செய்வதற்கும் வங்கிக்கு அதிகாரமுண்டு.

உரித்தாதனம்,ஏனைய ஆவணங்கள் மற்றும் விபரங்களை பெற்றுக்கொள்ள கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள அதிகாரிகளிடம் விசாரணைகளை மேற்கொள்ளவும், "சிரேஷ்ட முகாமையாளர் (வர்த்தக அறவீடு), ஹற்றன் நெஷனல் வங்கி பீ எல் சீ , இல. 479, ரி. பி. ஜாயா மாவத்தை, கொழும்பு 10." தொலைபேசி இல. : 011- 2661833, 011-2661836, 011- 2661826.

கே. பீ. என். சில்வா (ச.நீ.),
சிரேஷ்ட ஏல விற்பனையாளர்,
விலைமதிப்பீட்டாளர்,
மற்றும் நீதிமன்ற ஆணையாளர்.

இல. 109/12A, கோதமி வீதி,
பொரளை, கொழும்பு -08,
தொலைபேசி இல. : 011-2674626, 077-8441812.

06- 224

---

## ஹற்றன் நெஷனல் வங்கி பீஎல்சீ – பதவி - பராக்கிரமபுர கிளை

(முன்னர் வரையறுக்கப்பட்ட ஹற்றன் நஷனல் வங்கி என அறியப்பட்டது)

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின்கீழ் நடைபெறும் ஏல விற்பனை

அசையும் ஆதனம்/ இயந்திர உபகரணங்கள்

பிரசித்த ஏல விற்பனை

ஹற்றன் நெஷனல் வங்கி பீஎல்சீ தாபனத்தின் பெயருக்கு எழுதப்பட்ட, 2014, திசெம்பர் 01 ஆந் திகதியிடப்பட்ட அடகு முறி இலக்கம் 2014/02 திருகோணமலை காணி பதிவகத்தில் மேலதிக காணி பதிவாளர்/மேலதிக மாவட்டக் காணி பதிவாளர்/

எம். எஸ். எம். ஷவ்ராசினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட பிணை முறியின் கீழ் விக்கிரம ஆரச்சிகே ருவான் குமார மறுபெயர் விக்கிரம ஆராச்சிகே ருவான் குமார விக்கிரமாராட்சி என்பவர் கடப்பாடுடையவர்களாக, அடமானப் பத்திரத்தில் வழங்கப்பட்ட கடன் வசதிகளுக்காக செலுத்த வேண்டிய தொகையை செலுத்துவதில் தவறிழைத்துள்ளதால்,

ஹற்றன் நெஷனல் வங்கியால் எனக்களிக்கப்பட்ட அதிகாரத்தின் பிரகாரம், சொல்லப்பட்ட முறிகளின் கீழ் அறவிடப்பட வேண்டிய கடன் தொகை, சகல விதிப்பனவுகள் மற்றும் ஏல விற்பனைக் கட்டணங்கள் உட்பட சகல செலவுகளையும், அறவிடுவதற்காக இங்கு கீழ் விபரமாக குறிப்பிடப்பட்டுள்ள ஆதனம் காணி, மற்றும் அதிலுள்ள மண், மரங்கள், பயிர்ச்செய்கைகள், கட்டிடங்கள் மற்றும் அத்துடனான எல்லாம்.

2023 , யூலை 10 ஆந் திகதி மு. ப. 10.30 மணிக்கு அதே இடத்தில் ஆரம்பிக்கும் பகிரங்க ஏலத்தில் என்னால் விற்பனை செய்யப்படும்:

**அட்டவணை**

அநுராதபுரம் மாவட்டத்தில் உள்ள பராக்கிரமபுர பிரதான வீதி 388/B இலக்க வளவில் உள்ள கடப்பாட்டாளரின் எல்லா சார்ந்த துணைப்பொருட்கள் (இதன் பின்னர் குறிப்பிடப்பட்ட எல்லாம் கூட்டாக அசையும் இயந்திராதி மற்றும் உபகரணங்கள் உடனானது அல்லது ஏக உரிமையாளர் சம்பந்தப்பட்டது என அழைக்கப்படும்) அத்துடன் ஏனைய எல்லா வளவுகளிலும், கடப்பாட்டளர் மற்றும் அல்லது சொல்லப்பட்ட ஏக உரிமையாளர் இப்பொழுதோ அல்லது எந்த நேரத்திலோ காலத்திற்கு காலம் முன்சொல்லப்பட்ட மாவட்டத்திற்கு கொண்டு வரவோ, அல்லது அவற்றை வைக்கவோ அல்லது மற்ற இடத்தில் அல்லது இடங்களில் கடப்பாட்டாளர் அல்லது சொல்லப்பட்ட ஏக உரிமையாளர் எந்த நேரத்திலும் அத்துடன் காலத்திற்குக் காலம் கடப்பாட்டாளர், இதன் பின்னர் சொல்லப்பட்ட அசையும் இயந்திராதிகள் மற்றும் உபகரணங்களை கையாள முடியும்.

| சமநிலை கொதிநிலை பிரிவு பொருள் இலக்கம் | விபரம் | உண்மையான பெறுமதி ரூபா சதம் | கட்டாய விற்பனை பெறுமதி ரூபா சதம் |
|---|---|---|---|
| 01 | பெடி கிளீனர் | 550,000.00 | 495,000.00 |
| 02 | சோக்கிங் ராங்க் | 3,200,000.00 | |
| 03 | ஸ்ரீம் ராங்க் ஸ்குவயர் | 320,000.00 | 304,000.00 |
| 04 | ஸ்ரீம் ராங்க சேர்கியூலர் | 270,000.00 | 256,500.00 |
| 05 | எலிவேட்டர் | 225,000.00 | 213,750.00 |
| 06 | பொயிலர் | 1,025,000.00 | 1,005,000.00 |
| 07 | ஹஸ்க் பீடர் புளோவர் | 225,000.00 | 213,500.00 |
| 08 | ஆஷ் பீடர் புளோவர | 125,000.00 | 118,750.00 |
| 09 | ஆஷ் ஸ்ரோரேஜ் ரூம் | 175,000.00 | |
| 10 | கிரேயின் ட்ரையர் | 775,000.00 | 760,500.00 |
| 11 | பீடர் புளோவர் | 125,000.00 | 122,500.00 |
| 12 | ட்ரையர் 15000 Kg | 1,950,000.00 | 1,911,000.00 |
| 13 | ஹீற் எக்ஸ் சேஞ்சர் | 280,000.00 | 274,400.00 |
| | | 9,245,000.00 | 8,791,150.00 |

| அரைப்பு பிரிவு பொருள் இலக்கம் | விபரம் | உண்மையான பெறுமதி ரூபா. சதம் | கட்டாய விற்பனை பெறுமதி ரூபா. சதம் |
|---|---|---|---|
| 01 | பெடி கிளீனர் | 270,000.00 | 264,600.00 |
| 02 | ஜெற் பொலிஷர் | 530,000.00 | 519,000.00 |
| 03 | பொலிஷர் | 275,000.00 | 259,000.00 |
| 04 | கொம்பினேஷன் ஹலர் | 575,000.00 | 563,500.00 |
| 05 | பெடி கிளீனர் | 325,000.00 | 218,500.00 |
| 06 | கிரேடர் | 540,000.00 | 529,200.00 |
| 07 | எலிவேட்டர் 10, 14, 24 | 216,000.00 | 205,200.00 |
| 08 | டஸ்ட் செப்பரேட்டர் | 230,000.00 | 218,500.00 |
| 09 | டஸ்ட் புளோவர் | 170,000.00 | 161,500.00 |
| 10 | வேயிங் ஸ்கேல் 3 எண்ணிக்கை | 105,000.00 | 94,500.00 |
| 11 | பனல் போட் | 225,000.00 | 220,500.00 |
| 12 | கப்பாசிற்றர் பாங்க் | 475,000.00 | 465,500.00 |
| | | 3,936,000.00 | 3,819,500.00 |

| தரவாரிய பிரிவு பொருள் இலக்கம் | விபரம் | உண்மையான பெறுமதி ரூபா. சதம் | கட்டாய விற்பனை பெறுமதி ரூபா. சதம் |
|---|---|---|---|
| 01 | கலர் சோட்டர் | 4,375,000.00 | 4,156,250.00 |
| 02 | எலிவேற்ரேர்ஸ் - 3 எண்ணிக்கை | 360,000.00 | 342,000.00 |
| 03 | பெடிஸ்ரோரேஜ் டாங்க் - 2 எண்ணிக்கை | 225,000.00 | 213,750.00 |
| 04 | ஈ - ஸ்கேல் | 38,000.00 | 36,100.00 |
| 05 | பெடி கிறேடர் | 310,000.00 | 294,500.00 |
| 06 | சீலிங் மெஷீன் | 3,500.00 | 3,325.00 |
| 07 | டஸ்க் புளோவர் | 140,000.00 | 133,000.00 |
| 08 | கொம்பிளீட் கபின் | 240,000.00 | 228,000.00 |
| | | 5,691,500.00 | 5,406,925.00 |
| மொத்தம் | | 18,872,500.00 | 18,017,500.00 |

**பணிப்பாளர் சபையின் தீர்மான முடிவு பற்றிய அறிவித்தல்களுக்கு** - *2018, யூன் 14 மற்றும் 2022, யூன் 17 ஆந் திகதியிடப்பட்ட இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியிலும், 2018, யூன் 19 மற்றும் 2022, யூன் 24 ஆந் திகதிகளில் பிரசுரிக்கப்பட்ட 'மவ்பிம' 'டெயிலி மிரர்' மற்றும் 'தினக்குரல்' ஆகிய பத்திரிகைகளையும் பார்க்கவும்.*

**ஆதனத்துக்குப் பிரவேசிக்கும் வழி** .-கெபிதிகொல்லாவவிலிருந்து பதவிய வரை செல்லவும், பதவியாவிலிருந்து சுமார் 10 கி. மீ. சென்று பதவி பராக்கிரமபுரவை அடையலாம். ஸ்ரீ புரா நகரத்தை அடைய இன்னும் 11 கி. மீ. சென்று பின்னர் ஸ்ரீ புரா பிரதேச செயலகத்திலிருந்து 50 மீட்டர் தொலைவில் சென்று பொருள் வைக்கப்பட்டுள்ள வளாகத்தை அடையலாம்.

**கட்டணங்கள் செலுத்தும் முறை** .- உத்தேசக் கொள்வனவாளர் ஏல முடிவில் பின்வரும் கட்டணங்களை பணமாக ஏலதாரருக்கு செலுத்த வேண்டும்:-

(1) கொள்வனவு விலையின் முழுத்தொகை% ;
(2) உள்ளூராட்சி மன்ற வரி 1 %;
(3) ஏலதாரரின் தரகுப் பணம் 2.5% ;
(4) ஏலத்திற்காக செலவு செய்யப்பட்ட முழு விளம்பரச் செலவுகள்;
(5) இலிகிதர் மற்றும் கூவுவோர் கட்டணம் 2,000.00;
(6) விற்பனை நிபந்தனை உறுதிப்படுத்தலுக்கான நொத்தாரிசுக் கட்டணம் 2,000.00.

உரித்தாதனம்,ஏனைய ஆவணங்கள் மற்றும் விபரங்களை பெற்றுக்கொள்ள கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள அதிகாரிகளிடம் விசாரணைகளை மேற்கொள்ளவும், "சிரேஷ்ட முகாமையாளர் (வர்த்தக அறவீடு), ஹற்றன் நஷனல் வங்கி பீ எல் சீ , இல. 479, ரி. பி. ஜாயா மாவத்தை, கொழும்பு 10." தொலைபேசி இல. : 011- 2661833, 011-2661836, 011- 2661826.

கே. பீ. என். சில்வா, (ச.நீ.),
சிரேஷ்ட ஏல விற்பனையாளர்,
விலைமதிப்பீட்டாளர்,
மற்றும் நீதிமன்ற ஆணையாளர்.

இல. 109/12A, கோதமி வீதி,
பொரளை, கொழும்பு -08,
தொலைபேசி இல. : 011-2674626, 077-8441812.

06- 225

---

**ஹற்றன் நஷனல் வங்கி பீஎல்சீ**
**பதவி-பராக்கிரமபுர கிளை**
(முன்னர் வரையறுக்கப்பட்ட ஹற்றன் நஷனல் வங்கி என அறியப்பட்டது)

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின்கீழ் நடைபெறும் பிரசித்த ஏல விற்பனை

வட மத்திய மாகாணத்தின் அநுராதபுர மாவட்டத்தில் உள்ள நுவரகம் பலாத்த கிழக்கு பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள கனதர கோறளவில் உள்ள கிராம அலுவலர் பிரிவு இலக்கம் 240 இல் உள்ள அத்திகுளம கிராமத்தில் உள்ள பகிரப்பட்ட ஒரு ரூட் (ஏ0:ரூ1:பே0) விஸ்தீரணத்துடனான காணி, கட்டடங்கள், மரங்கள், பயிர்ச்செய்கைகள் மற்றும் அத்துடனான எல்லாம்.

ஹற்றன் நெஷனல் வங்கி பீ எல் சீ தாபனத்தின் பெயருக்கு எழுதப்பட்ட, அனுராதபுரம் பிரசித்த நொத்தாரிசு யூ. விஜயரட்னவினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2013, யூலை 03 ஆந் திகதியிடப்பட்ட 1774 மற்றும் 2014, நவெம்பர் 05 ஆந் திகதியிடப்பட்ட 2469 ஆகிய இரு இலக்க பிணை முறிகளின் கீழ், விக்கிரம ஆராச்சிகே ருவான் குமார மறுபெயர் விக்கிரம ஆராச்சிகே ருவான் குமார விக்கிரமாராட்சி என்பவர், கடப்பாடுடையவர்களாக, அடமானப் பத்திரத்தில் வழங்கப்பட்ட கடன் வசதிகளுக்காக செலுத்த வேண்டிய தொகையை செலுத்துவதில் தவறிழைத்துள்ளதால்,

ஹற்றன் நெஷனல் வங்கியால் எனக்களிக்கப்பட்ட அதிகாரத்தின் பிரகாரம்,சொல்லப்பட்ட முறிகளின் கீழ் அறவிடப்பட வேண்டிய கடன் தொகை, சகல விதிப்பனவுகள், மற்றும் ஏல விற்பனைக் கட்டணங்கள் உட்பட சகல செலவுகளையும், அறவிடுவதற்காக இங்கு கீழ் விபரமாக குறிப்பிடப்பட்டுள்ள ஆதனம் காணி, மற்றும் அதிலுள்ள மண், மரங்கள், பயிர்ச்செய்கைகள், கட்டிடங்கள் மற்றும் அத்துடனான எல்லாம்.

2023 யூலை 10 ஆந் திகதி மு. ப. 9.00 மணிக்கு

அதே இடத்தில் ஆரம்பிக்கும் பகிரங்க ஏலத்தில் என்னால் விற்பனை செய்யப்படும்.

**அட்டவணை**

வட மத்திய மாகாணத்தின் அநுராதுபுர மாவட்டத்தில் உள்ள நுவரகம் பலாத்த கிழக்கு பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள கனதர கோறளவில் உள்ள கிராம அலுவலர் பிரிவு இலக்கம் 240

இல் உள்ள அத்திகுளம கிராமத்தில் உள்ள பகிரப்பட்ட காணியின் எல்லைகள் - வடக்கு: டபிள்யூ. வி. எச். அப்புஹாமியின் காணி; கிழக்கு: குறுக்கு வீதி; தெற்கு: கருணாரட்னவின் காணி; மேற்கு: எம். ஜயரட்னவின் காணி அத்துடன், ஒரு றூட் (ஏ0:றூ1:பே0) விஸ்தீரணத்துடனான எல்லாம்.

மேற்குறிப்பிட்ட காணி மிக அண்மையில் மேற்கொள்ளப்பட்ட நில அளவைக்கு அமைய பின்வருமாறு விபரிக்கப்பட்டுள்ளது:

வட மத்திய மாகாணத்தின் அநுராதபுர மாவட்டத்தில் உள்ள நுவரகம் பலாத்த கிழக்கு பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள கனதர கோறளவின் கிராம அலுவலர் பிரிவு இலக்கம் 240 அத்திக்குளம கிராமத்தில் உள்ள விஜய மாவத்தை 21/82 வரிமதிப்பீட்டிலக்கத்தைக்கொண்டுள்ளது,பிரசித்தநொத்தாரிசு ஆர். பி. அபயசிங்கவினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட, உறுதி இலக்கம் 841 இல் விபரிக்கப்பட்டுள்ள காணி, உரிமம் பெற்ற நில அளவையாளர் ஜே. ரி. கலகெதரவினால் தயாரிக்கப்பட்ட 07.02.2008 ஆந் திகதியிடப்பட்ட 2033 ஆம் இலக்க வரைபடத்தில், உள்ள காணித்துண்டு 1 என அடையாளம் இடப்பட்ட பிரிக்கப்பட்ட மற்றும் வரையறுக்கப்பட்ட பகிரப்பட்ட காணியின் எல்லைகள் - வடக்கு: டபிள்யூ. வி. எச். அப்புஹாமியின் காணி; கிழக்கு: வீதிக்கான ஒதுக்கீடு (மா. ச.); தெற்கு: வீதிக்கான ஒதுக்கீடு (மா. ச.); மேற்கு: அனுர ரட்நாயக்காவின் அனுமதியற்ற காணி அத்துடன் ஒரு ரூட் (ஏ0. 1றூ.0பே) அல்லது சைபர் தசம் ஒன்று சைபர் ஒன்று ஒன்று ஹெக்டயார் (0.1011 ஹெக்டயர்) விஸ்தீரணத்துடனான கட்டடங்கள், மரங்கள், பயிர்ச்செய்கைகள் மற்றும் அத்துடனான எல்லாம்.

பணிப்பாளர் சபையின் தீர்மானம் முடிவு அறிவித்தல்கள்

2018, யூன் 14 மற்றும் 2022, யூன்17 ஆந் திகதியிடப்பட்ட இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியிலும், 2018, யூன் 19 மற்றும் 2022, யூன் 24 ஆந் திகதிகளில் பிரசுரிக்கப்பட்ட 'மவ்பிம' 'டெயிலி மிரர்' மற்றும் 'தினக்குரல்' ஆகிய பத்திரிகைகளை பார்க்கவும்.

**ஆதனத்துக்குப் பிரவேசிக்கும் வழி.**- வங்கி நகரத்திலிருந்து, ஹரிச்சந்திரா மாவத்தை வழியாக மருத்துவமனை சந்திப்பு வரை சுமார் 1.50 கி. மீ. சென்று, பின்னர் பண்டாரநாயக்க மாவத்தையில் இடதுபுறம் திரும்பவும்,பண்டாரநாயக்க மாவத்தை வழியாக விமான நிலைய சந்தி வரை சுமார் 1.5 கி. மீ. சென்று, பின்னர் இடதுபுறம் திரும்பி சுமார் 1.25 கி.மீ வரை சென்று நுகே சந்தியை அடையவும். அங்கிருந்து இடதுபுறம் திரும்பி சுமார் 300 மீட்டர் தூரம் பயணித்து மூன்று சாலை சந்திப்பை சந்திக்கவும் அடையவும். அங்கு வலதுபுறம் இருக்கும் சாலையில் திரும்பி சுமார் 200 மீட்டர் வரை சரளை சாலையில் செல்லவும். பின்னர் சரளை சாலையில் இடதுபுறம் திரும்பி, மேலும் 75 மீட்டர் தூரம் சென்று பொருள் சொத்தை அடையலாம். பொருள் சொத்து, விஜய மாவத்தை. இலக்கம் 21/85 என்னும் இடத்தில், சாலையின் வலது புறத்தில் உள்ளது.

**கட்டணங்கள் செலுத்தும் முறை** .- உத்தேசக் கொள்வன வாளர் ஏல முடிவில் பின்வரும் கட்டணங்களை பணமாக ஏலதாரருக்கு செலுத்த வேண்டும்:-

(1) கொள்வனவு விலையின் 10% ;
(2) உள்ளூராட்சி மன்ற வரி 1 %;
(3) ஏலதாரரின் தரகுப் பணம் 2.5%;
(4) ஏலத்திற்காக செலவு செய்யப்பட்ட முழு விளம்பரச் செலவுகள்;
(5) இலிகிதர் மற்றும் கூவுவோர் கட்டணம் 2000.00;
(6) விற்பனை நிபந்தனை உறுதிப்படுத்தலுக்கான நொத்தாரிசுக் கட்டணம் 2,000.00.

மேலும் கொள்வனவு தொகையில் மிகுதி 90% ஏலத் திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் ஹற்றன் நெஷனல் வங்கி பீஎல்சீக்கு செலுத்த வேண்டும்.மேற்குறிப்பிட்டவாறு மிகுதிப் பணம் குறிப்பிட்ட திகதிக்கு முன்னால் செலுத்தப்படாதவிடத்து செலுத்திய பத்து வீத (10%) பணத்தை திருப்பித் தராமலிருப்பதற்கு அதே காணியை மறு ஏல விற்பனை செய்வதற்கும் வங்கிக்கு அதிகாரமுண்டு.

உரித்தாதனம்,ஏனைய ஆவணங்கள் மற்றும் விபரங்களை பெற்றுக்கொள்ள கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள அதிகாரிகளிடம் விசாரணைகளை மேற்கொள்ளவும், "சிரேஷ்ட முகாமையாளர் (வர்த்தக அறவீடு), ஹற்றன் நஷனல் வங்கி பீ எல் சீ , இல. 479, ரி. பி. ஜாயா மாவத்தை, கொழும்பு 10." தொலைபேசி இல. : 011- 2661833, 011-2661836, 011- 2661826.

கே. பீ. என். சில்வா (ச.நீ.),
சிரேஷ்ட ஏல விற்பனையாளர்,
விலைமதிப்பீட்டாளர்,
மற்றும் நீதிமன்ற ஆணையாளர்.

இல. 109/12A, கோதமி வீதி,
பொரளை, கொழும்பு -08,
தொலைபேசி இல. : 011-2674626, 077-844181.

06- 222

---

HNB/67-2022

**ஹற்றன் நஷனல் வங்கி பீஎல்சீ – புத்தல கிளை**

(முன்பு ஹற்றன் நஷனல் வங்கி லிமிட்டெட் என சொல்லப்பட்டது)

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் ஆதனம் பகிரங்க ஏல விற்பனை

பதுளை பிரசித்த நொத்தாரிசு எச். ராஜபக்ஷ அவர்களால் எழுதி உறுதிப்படுத்தப்பட்ட ஹற்றன் நஷனல் வங்கி பீஎல்சீ யின் பெயருக்கு எழுதப்பட்ட இல. 3274 மற்றும் 2018.12.20ஆந் திகதியிடப்பட்ட ஈட்டுமுறியின் கீழ் பெற்றுக்கொள்ள வேண்டிய கொடுப்பனவைச் செலுத்துவதற்கு கடனாளியாக, உடுவில ஆராச்சிகே சரச்சந்திர குணசேன புறக்கணிக்கப்பட்டுள்ளதாலும், அந்த ஈட்டுமுறியின் கீழ் செலுத்தவேண்டிய கொடுப்பனவு தொகையை, எல்லா வகையிலும் நிறுவப்பட்ட கொடுப்பனவு

மற்றும் ஏலதாரரின் கொடுப்பனவுகள் உட்பட சகல கொடுப்பனவுகளையும் பெற்றுக் கொள்வதற்காக, ஹற்றன் நெஷனல் பாங்க் பீஎல்சீ அவர்களால், எனக்களிக்கப்பட்ட அதிகாரத்தின் படி, கீழே குறிப்பிடப்பட்ட ஆதனத்தை 2023ஆம் ஆண்டு யூலை மாதம் 07 ஆந் திகதி மு.ப. 9.30 மணிக்கு, இந்த ஆதனம் அமைந்துள்ள இடத்திலேயே என்னால் பகிரங்க ஏல விற்பனை செய்யப்படும்.

**ஆதன இடாப்பு**

ஊவா மாகாணம், மொணராகலை மாவட்டம், புத்தல கோரளை, புத்தல பிரதேச செயலாளர் பிரிவில் மற்றும் வெள்ளவாய பிரிவில், மெதகம கிராம அலுவலர் பிரிவினுள், அலுகலாவிட கிராமத்தில் மெதகம ஹப்போருவே அமைந்துள்ள உடுமுல்லே ஹென்யாய என்ற பெயருடைய காணிக்கு அதிகாரம் பெற்ற நில அளவையாளர் டபிள்யு, வில்மட் சில்வா அளந்து தயாரிக்கப்பட்ட இல.903 மற்றும் 1997.08.29 ஆந் திகதியுடைய வரைபடத்தில் லொட் 02 என அடையாளமிடப்பட்டு பிரித்து வேறாக்கப்பட்ட (0ஏ.1றூ.21பே.) விசாலமுடைய காணியோடும் அதனுள் அமைந்துள்ள அனைத்து சகலதும்.

**தீர்மானம் பற்றிய அறிவித்தலுக்காக**.- 2022.06.03 ஆந் திகதியிடப்பட்ட அரசாங்க வர்த்தமான பத்திரிகை, 2022.06.09 மற்றும் 2022.06.13 ஆந் திகதியிடப்பட்ட "மவ்பிம", "டெயிலி மிரர்" மற்றும் "தினக்குரல்" ஆகிய பத்திரிகைகளை பார்க்கவும்.

**காணிக்குச் செல்லும் விதம்**. - புத்தல நகரத்தில் இருந்து கதிர்காமம் வழியில் (ராஜ மாவத்தை) நீடிக்கும் 1.5 கிலோமீற்றர் வரை பிரயாணம் செய்யும் பொழுது நான்கு பக்க சந்தியில் 200 மீற்றர் வரை செல்லும் பொழுது இடது பக்கத்தில் அமைந்துள்ள குரு வீதியை அடையலாம். இந்த குரு வீதியை நீடிக்கும் 25 மீற்றர் வரை செல்லும் பொழுது வீதியின் இறுதியாக குறித்த காணி அமைந்துள்ளது.(சமன் அரிசி ஆலை).

**கட்டணங்கள் செலுத்தும் முறை** .- உத்தேச கொள்வனவாளர் ஏல முடிவில் பின்வரும் கட்டணங்களை பணமாக ஏலதாரருக்கு செலுத்த வேண்டும். காசோலைகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது :-

(1) கொள்வனவு விலையின் 10% ;
(2) உள்ளூராட்சி மன்ற வரி 1 %;
(3) ஏலதாரரின் தரகுப் பணம் 2.5% ;
(4) விற்பனை நிபந்தனைகளை உறுதி செய்வதற்கு நொத்தாரிசுக் கட்டணம் 2,000.00;
(5) இலிகிதர் மற்றும் கூவுவோர் கட்டணம் 1,500.00;
(6) முழு விளம்பரச் செலவுகள்.

கொள்வனவு தொகையில் மிகுதி 90% ஏலத் திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் ஹற்றன் நெஷனல் வங்கி பீஎல்சீக்கு செலுத்த வேண்டும். 30 நாட்கள் தவறினால் கொடுக்கப்பட்ட பணம் 10% திருப்பி செலுத்தப்படமாட்டாது. காணி மீண்டும் ஏலத்தில் விட வங்கிக்கு உரிமை உண்டு.

உரித்து உறுதி மற்றும் குறித்த ஆவணங்களை பரிசோதிக்க மற்றும் மேலதிக விபரங்களுக்கு "மூத்த முகாமையாளர் (கடன்கள் அறவிடுதல்), ஹற்றன் நஷனல் வங்கி பீ எல் சீ, இல. 479, ரி. பி. ஜாயா மாவத்தை, கொழும்பு 10." தொலை பேசி இல. : 011- 2661826, 011-2661835.

ஜே. டபிள்யூ. ஈ. ஜயவர்தன,
(முழுத்தீவுக்குமான சமாதான நீதவான்),
நீதிமன்ற ஆணையாளர், மதிப்பீட்டாளர்,
அதிகாரம் பெற்ற ஏலவிற்பனையாளர்.

இல. 59, குமார மாவத்தை,
படுவத, தோடந்துவ,
தொலைபேசி இல. : 0779-663420, 0713-358434,
074- 2596429.
மின்னஞ்சல் இல. : ejayawardhana77@gmail.com

06- 187

---

## இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக்கூட்டுத்தாபன வங்கி (HDFC வங்கி)

( காலத்திற்குக் காலம் திருத்தம் செய்யப்பட்ட) 1990 ஆம் ஆண்டின் 4ஆம் இலக்க வங்கியினால் வழங்கப்பட்ட கடன்களை அறவீடு செய்வதற்கான ( விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 04 ஆம் பிரிவின் கீழான பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்வது தொடர்பான அறிவித்தல்

கடன் இலக்கம்: 112500000403 மற்றும் 112500000428.
கடனாளியின் முழுப்பெயர்: சந்துன் முதித்த விக்ரமநாயக்க

இங்கு இதன் பிறகு வங்கி என்று அழைக்கப்படும் (2003 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க மற்றும் 2011 ஆம் ஆண்டின் 45 ஆம் இலக்க இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக்கூட்டுத்தாபன சட்டத்தினால் திருத்தப்பட்ட) 1997 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக்கூட்டுத்தாபன சட்டத்தினால் உருவாக்கப்பட்ட, இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக்கூட்டுத்தாபன வங்கியினால் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு 2023.05.19 ஆந் திகதிய 2333 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியிலும் 2023.05.19 ஆந் திகதிய "தினமின", "தினகரன் மற்றும் "டெய்லிநியூஸ்" பத்திரிகைகளிலும் பிரசுரிக்கப்பட்டதன் பிரகாரம் பின்வரும் பணத்தினை அறவீடு செய்வதற்காக (எவ்வாறாயினும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டதன் பின்னர் ஏதேனும் பணம் செலுத்தியிருந்தால் குறிப்பிட்ட பணத்தினை கழித்ததன் பின்னர் மிகுதிப் பணத்தினை அறவீடு செய்வதற்காக) கீழே குறிப்பிடப்பட்டுள்ள ஆதனம் இலக்கம் 134, பெத்தகான வீதி, கோட்டே என்ற முகவரியில் வசிக்கும் அனுமதிபெற்ற நில அளவையாளர் பீ.கே.ஈ. சேனாபத்தி என்பவரினால் 2023.07.06ஆந் திகதி பி.ப. 1.30 மணியில் இருந்து கீழே குறிப்பிடப்பட்டுள்ள ஆதனம் அமைந்துள்ள இடத்தில் அல்லது HDFC வங்கி, பிலியந்தல கிளையில் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும் என்பதனை குறிப்பிட்ட 1990 ஆம் ஆண்டின் 04 ஆம் இலக்க வங்கியினால் வழங்கப்படும்

கடன்களை அறவீடு செய்யும் ( விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 09 ஆம் பிரிவின் கீழ் இத்தால் அறிவித்தல் வழங்கப்படுகின்றது.

குறிப்பிட்ட 3169 ஆம் இலக்க மற்றும் 4089 ஆம் இலக்கத்தினைக் கொண்ட அடகுப்பத்திரங்களின்படி, ஒரு கோடி பதின்மூன்று இலட்சத்து எழுபத்து ஆறாயிரத்து நாநூற்று எழுபத்து ஒரு ரூபா இருபத்து ஐந்து சதம் (ரூபா 11,376,471.25) 2023.03.31 ஆந் திகதி வரை இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக்கூட்டுத்தாபன வங்கிக்கு கிடைக்க வேண்டியுள்ளதால்,

1. முதலாவது கடன் தொகை 112500000403

குறிப்பிட்ட கடன் தொகையின் மீளச் செலுத்தப்படாத முழுத் தொகையான எழுபத்து ஐந்து இலட்சத்து தொண்ணூற்று ஒன்பதாயிரத்து ஐந்நூற்று ஐம்பத்து இரண்டு ரூபா அறுபத்து ஏழு சதம் (ரூபா 7,599,552.67) 2023.03.31 ஆந் திகதி வரை நிலுவைக்கான வட்டியாக பன்னிரெண்டு இலட்சத்து எழுபதாயிரத்து அறுபத்து ஏழு ரூபா ஒன்பது சதத்தினையும் (ரூபா 1,270,067.09) இதன்படி முழுத் தொகையான எண்பத்து எட்டு இலட்சத்து அறுபத்து ஒன்பதாயிரத்து அறுநூற்று பத்தொன்பது ரூபா எழுபத்து ஆறு சதத்தினையும் (ரூபா 8,869,619.76).

இரண்டாவது கடன் தொகை 112500000428

குறிப்பிட்ட கடன் தொகையின் மீளச் செலுத்தப்படாத முழுத் தொகையான இருபது இலட்சத்து ஆறாயிரத்து எண்ணூற்று இருபத்து நான்கு ரூபா ஐம்பத்து நான்கு சதத்தினையும் (ரூபா 2,006,824.54) 2023.03.31 ஆந் திகதி வரை நிலுவைக்கான வட்டியாக ஐந்து இலட்சத்து இருபத்து ஆறு ரூபா தொண்ணூற்று ஐந்து சதத்தினையும் (ரூபா 500,026.95) இதன்படி முழுத் தொகையான இருபத்து ஐந்து இலட்சத்து ஆறாயிரத்து எண்ணூற்று ஐம்பத்து ஒரு ரூபா நாற்பத்து ஒன்பது சதத்தினையும் (ரூபா 2,506,851.49) இதன்படி இரண்டு கடன்களின் மொத்த கூட்டுத்தொகையான ஒரு கோடி பதின்மூன்று இலட்சத்து எழுபத்து ஆறாயிரத்து நாநூற்று எழுபத்து ஒரு ரூபா இருபத்து ஐந்து சதத்தினையும் (ரூபா 11,376,471.25).

2. குறிப்பிட்ட முதலாவது கடன் தொகையில் மீளச் செலுத்தாத தொகையான எழுபத்து ஐந்து இலட்சத்து தொண்ணூற்று ஒன்பதாயிரத்து ஐந்நூற்று ஐம்பத்து இரண்டு ரூபா அறுபத்து ஏழு (ரூபா 7,599,552.67) சதத்திற்காக அறவிட வேண்டிய 16.19% வீத வருடாந்த வட்டியினையும், இரண்டாவது கடன் தொகையில் மீளச் செலுத்தாத தொகையான இருபது இலட்சத்து ஆறாயிரத்து எண்ணூற்று இருபத்து நான்கு ரூபா ஐம்பத்து நான்கு (ரூபா 2,006,824.54) சதத்திற்காக அறவிட வேண்டிய 16.08% வீத வருடாந்த வட்டியினையும், 2023.04.01 ஆந் திகதியிலிருந்து ஆதனம் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும் திகதி வரை (அந்த இரு தினங்களும் அடங்கலாக) அறவீடு செய்து கொள்வதற்கும்,

3. 2023.04.01 ஆந் திகதி தொடக்கம் ஆதனம் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும் திகதி வரை (அந்த இரு தினங்களும் அடங்கலாக) மேற்கூறப்பட்ட கடனின் மொத்த நிலுவைத் தொகையான பதினாறு இலட்சத்து ஒன்பதாயிரத்து தொள்ளாயிரத்து முப்பத்து ஏழு ரூபா தொண்ணூற்று நான்கு (ரூபா 1,609,937.94) சதத்திற்காக மாதாந்தம் 2.00% வீத தாமத வட்டி ஒன்றினை அறவீடு செய்வதற்கும்,

4. 1990 ஆம் ஆண்டின் 04 ஆம் இலக்க வங்கியின் மூலம் வழங்கப்பட்ட கடனை அறவீடு செய்யும் விசேட ஏற்பாடுகள் சட்டத்தின் 13 ஆம் பிரிவின் கீழ் அறவீடு செய்யத்தக்க பணம் மற்றும் கட்டணங்களை,

அறவீடு செய்து கொள்வதற்கும் (இதுவரையில் ஏதாவது பணம் செலுத்தப்பட்டிருந்தால் அவற்றை கழித்த பின்னர்) மேற்குறிப்பிட்ட அடமானப் பத்திரத்தின் மூலம் இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக்கூட்டுத்தாபன வங்கிக்கு அடகு வைக்கப்பட்டுள்ள இங்கு கீழே குறிப்பிடப்பட்டுள்ள அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள ஆதனம் மற்றும் வளவு, பகிரங்க ஏல விற்பனையாளர் பீ. கே. ஈ. சேனாபத்தி என்பவரினால் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்பட வேண்டும் என, 2011 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க சட்டத்தினால் திருத்தப்பட்ட 1990 ஆம் ஆண்டின் 04 ஆம் இலக்க, வங்கியினால் வழங்கப்பட்ட கடன்களை அறவீடு செய்தவற்கான (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் மூலம் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின்படி, இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக்கூட்டுத்தாபன வங்கியின் பணிப்பாளர்கள் சபையினால் 2023 ஆம் ஆண்டின் ஏப்பிறல் மாதம் 27 ஆம் திகதி நடைபெற்ற பணிப்பாளர் சபைக் கூட்டத்தின் போது ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டுள்ளது.

112500000403 மற்றும் 112500000428

**அட்டவணை**

மேல் மாகாணத்தில், கொழும்பு மாவட்டத்தில், சல்பிட்ட கோரளை பல்லேபத்துவவில். கேஸ்பேவ நகரசபை எல்லையில், கெஸ்பேவ பிரதேச செயலகப் பிரிவில், கெஸ்பேவ தெற்கு இலக்கம் 572A கிராம அலுவலர் பிரிவில் பேரவவல மற்றும் தெமட்டதூவவில் வரிமதிப்பீட்டிலக்கம் 15/17, கருவாத்தோட்ட வீதியில் அமைந்துள்ள மொரகஹகலே, கஹட்டகஹலந்த, தவட்டகஹவத்த மற்றும் மொரகஹவத்த என்று அழைக்கப்படும் காணிக்கு 2009, யூலை 26 ஆந் திகதி, அனுமதிபெற்ற நில அளவையாளர் எச். கே. மகிந்த என்பவரினால் அளந்து தயாரிக்கப்பட்ட 3743 ஆம் இலக்க காணி வரைபடத்தின்படி 2 ஆம் இலக்க காணித்துண்டின் எல்லைகளாக - வடக்கு: 154 ஆம் இலக்க காணிவரைபடத்தின்படி B என்ற இலக்க காணித்துண்டும்; கிழக்கு: இதன் 3 ஆம் இலக்க காணித்துண்டும்; தெற்கு: 25 ஆம் இலக்க காணித்துண்டும்; மேற்கு: 26 ஆம் மற்றும் 1ஆம் இலக்க காணித்துண்டுகளும் அமைந்து காணப்படுகின்றன இதன் பரப்பளவு பத்து தசம் ஐந்து பூச்சியம் பேர்ச் (00ஏ. 00று. 10.50பே.). காணி வரைபடம் 3743 இன்படி இக் காணித்துண்டும் இதில் காணப்படும் கட்டிடங்கள்,

மரங்கள், பழவகைகள் மற்றும் பாதைக்கான உரிமையும் காணித்துண்டு 26 (பாதைக்கான ஒதுக்கம், கல்வாய் 4.5 மீ. அகலம்) காணித்துண்டிலக்கம் 1B (பாதைக்கான ஒதுக்கம் 6 அடி அகலம்) அடங்கலாக அனைத்தும் தெல்கந்த - நுகேகொட காணிப்பதிவு காரியாலயத்தில் C 959/57 என்ற தலைப்பின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

பொது முகாமையாளர்.

இ. வீ. அ. நி. கூ. வங்கி,
சேர். சித்தம்பலம் ஏ காடினர் மாவத்தை,
த. பெ. இல. 2085,
கொழும்பு 02,
2023.06.05.

06-227

---

## ஹற்றன் நஷனல் வங்கி பீஎல்சீ –மொரட்டுமுல்ல கிளை

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் விற்பனை அறிவித்தல்
பெறுமதிமிக்க ஆதனம் ஏல விற்பனை

கொழும்பு பிரசித்த நொத்தாரிசு பீ.வீ. என்.டபிள்யூ. பெரேரா வினால் ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல்.சீயின் சார்பாக எழுதி அத்தாட்சிப்படுத்தப்பட்டதுமான 2016.11.24 ஆந் திகதிய 5449 ஆம் இலக்க ஈட்டுமுறிப் பத்திரத்தின் மூலம் டீ.பீ.டீ. லங்கா ஆட்டோமோட்டிவ் என்ற பெயர் பாணி மற்றும் நிறுவன வர்த்தக நாமத்தின் கீழ் கூட்டு வியாபார நடவடிக்கைகளை மேற்கொண்டு செல்லும் மெரஞ்ஞகே பின்சிறி அல்லது மற்றும் மலிமிகே துலாணி தம்மிகா பிரணாந்து அல்லது மலிம்கே துலானி தம்மிகா சல்காது ஆகியோர் கடன்பட்டோர்களாக இங்கு முதலாம் அட்டவணையில் மற்றும் ஹற்றன் நஷனல் வங்கி பீஎல்சீ சார்பில் கொழும்பு பிரசித்த நொத்தாரிசு பீ.வீ.என். டபிள்யூ பெரேராவினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2018.04.20 ஆந் திகதியிடப்பட்ட 5943 ஆம் இலக்க ஈட்டு முறி மூலம் டீ.பீ. டீ. லங்கா ஆட்டோமோட்டிவ் என்ற பெயர், பாணி மற்றும் நிறுவன வர்த்தக நாமத்தின் கீழ் கூட்டு வியாபார நடவடிக்கைகளை மேற்கொண்டு செல்லும் மெரஞ்ஞகே பின்சிறி அல்லது மற்றும் மலிமிகே துலாணி தம்மிகா பிரணாந்து அல்லது மலிம்கே துலாணி தம்மிகா சல்காது ஆகியோர் கடன்பட்டோர்களாக கடன் செலுத்துவதில் தவணை தவறியுள்ளதால் சொல்லப்பட்ட முறியின் கீழ் அறவிடப்பட வேண்டிய கடன் தொகை, சகல கொடுப்பனவுகள் மற்றும் ஏல விற்பனை கட்டணம் உள்ளடங்கலாக சகல செலவுகளையும் அறவிடுதல் பொருட்டு, இங்கு கீழே குறிப்பிடப்பட்டுள்ள ஆதனம்,

இந்த ஏல விற்பனையானது COVID 19 செயற்பாட்டுக் கட்டளை களை அனுசரிக்கப்படும் விதத்தில் சுகாதார அமைச்சினால் விநியோகிக்கப்பட்டுள்ள வலுவான வழிகாட்ட ளுக்கமைய நடாத்தப்படும்.

01. மேல் மாகாணம், கொழும்பு மாவட்டத்தில், பல்லேபத்துவில் சல்பிற்ற கோரளையில் மொரட்டுவ பிரதேச செயலாளர் பிரிவு மற்றும் மாநகர சபை எல்லைக்குள் 559 - இதபெத்த மேற்கு கிராம அலுவலர் பிரிவில் இஹல இதிபெத்தவில் அமைந்துள்ள மற்றும் 2/7 மற்றும் 2/ 8 ஆகிய வரிமதிப்பீட்லக்கங்களைக் கொண்ட இஹல இதபெத்த வீதி கொரககஹாவத்த கொரககஹாகனத்த மற்றும் கட்டுகஸ்துடுவேவத்த என அழைக்கப்படும் காணிக்கு உரிமம் பெற்ற நில அளவையாளர் ஜே.ஜி.டி. அரசகுலரத்னவினால் தயாரிக்கப்பட்ட 2008, ஒற்றோபர் 06 ஆந் திகதிய 903 ஆம் இலக்க வரைபடத்தில் காணித்துண்டு A என்ற இடம் அளவில் இருபது தசம் மூன்று பூஜ்யம் பேர்ச் (0ஏ.0றூ.20.30பே.) விஸ்தீரணமான காணி மற்றும் அத்துடன் அமைந்துள்ள மரங்கள், பழங்கள், கட்டிடங்கள் உட்பட சகலதும்.

ஹற்றன் நஷனல் வங்கியினால் எனக்களிக்கப்பட்ட அதிகாரத் தின் கீழ் 2023 ஆம் ஆண்டு யூன் மாதம் 30 ஆந் திகதி மு.ப. 9.00 மணிக்கு என்னால் அக்காணி அமைந்துள்ள இடத்திலேயே பகிரங்க ஏலவிற்பனையில் விற்கப்படும்.

02. மேல் மாகாணம், கொழும்பு மாவட்டத்தில், பல்லேபத்துவில் சல்பிற்ற கோரளையில் மொரட்டுவ பிரதேச செயலாளர் பிரிவு மற்றும் மாநகர சபை எல்லைக்குள் 559 - இதபெத்த மேற்கு கிராம அலுவலர் பிரிவில் இஹல இதிபெத்தவில் அமைந்துள்ள கொரககஹவத்த கொரககஹாகனத்த மற்றும் கட்டுகஸ்துடுவேவத்த என அழைக்கப்படும் காணிக்கு உரிய அதே 993 ஆம் இலக்க வரைபடத்தில் காணித்துண்டு 3, அளவில் இருபது பேர்ச் (0ஏ.0றூ.20பே.) விஸ்தீரணமுடைய காணி மற்றும் அதில் அமைந்துள்ள மரங்கள், பழங்கள், கட்டிடங்கள் உட்பட சகலதும்.

ஹற்றன் நஷனல் வங்கியினால் எனக்களிக்கப்பட்ட அதிகாரத் தின் கீழ் 2023 ஆம் ஆண்டு யூன் மாதம் 30 ஆந் திகதி மு.ப. 9.30 மணிக்கு என்னால் அக்காணி அமைந்துள்ள இடத்திலேயே பகிரங்க ஏலவிற்பனையில் விற்கப்படும்.

**மேலதிக விபரங்களுக்காக**.- 2022.08.19 ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானியையும் , 2022.10.26ஆந் திகதியிடப்பட்ட "மவ்பிம", "டெயிலி மிரர்" மற்றும் "தினக்குரல்" ஆகிய பத்திரிகைகளைப் பார்க்கவும்.

**ஆதனத்திற்கு உட்பிரவேசிக்கும் வழி**.- கொழும்பு காலி வீதியில் 18 ஆவது கிலோ மீற்றர் மைற்கல்லைக் கடந்து 100 மீற்றர் அளவு முன்னோக்கி சென்று இடது பக்கம் திரும்பி

மெண்டிஸ் மாவத்தைக்குப் பிரவேசித்து 1 1/2 கிலோ மீற்றர் பயணித்து புவக்அராபே சந்திக்கு சென்று வலது பக்கம் திரும்பி இஹல இந்திபெத்த வீதிக்குப் பிரவேசித்து சுமர் 300 மீற்றர் தூரம் பயணித்து வலது பக்கம் திரும்பி கட்டுபிட்டிய வீதிக்குள் பிரவேசித்து சுமார் 150 மீற்றர் தூரம் அளவு பயணித்ததன் பின்னர் இடது பக்கமுள்ள இடத்துக்கு சென்றதும் சொல்லப்பட்ட காணியை அடையலாம்.

**கட்டணங்கள் செலுத்தும் விதம் .-**

(1) கொள்வனவு விலையின் 10% ( பத்து சதவீதம்);
(2) உள்ளூர் அதிகார சபைக்கு செலுத்த வேண்டிய தேசிய விற்பனை வரி 1 %;
(3) ஏலதாரரின் தரகுப் பணமாக விற்பனை விலையில் 2 1/2% ;
(4) எழுதுவினைஞர் மற்றும் கூவுவோர் கட்டணம் ரூபா 1,000.00;
(5) விற்பனைச் செலவுடன் வேறு ஏதும் கட்டணங்கள் இருப்பின் அந்தத் தொகையும் ;
(6) விற்பனை அத்தாட்சிப்பத்திரத்துக்கான முத்திரைக் கட்டணம்.

கொள்வனவு தொகையில் மிகுதி 90% ஏலத் திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் ஹற்றன் நெஷனல் வங்கி பீஎல்சீக்கு காசாக செலுத்த வேண்டும். சொல்லப்பட்ட எஞ்சிய தொகை மேற்குறிப்பிடப்பட்டவாறு 30 நாட்களுக்குள் செலுத்தப்படாது போனால் ஏற்கனவே செலுத்தப்பட்ட கொள்வனவு விலையின் 10% தண்டப்பணமாக அறவிடவும், ஆதனத்தை மீள விற்பனை செய்யவும் வங்கிக்கு அதிகாரமுண்டு.

உரித்து உறுதிகளையும் அவை தொடர்பான வேறு ஆதனங்களையும் பெற்றுக்கொள்ள.-

"சிரேட்ட முகாமையாளர் ( வணிக அறவீடுகள்), ஹற்றன் நஷனல் வங்கி பீ எல் சீ , இல. 479, ரி. பி. ஜாயா மாவத்தை, கொழும்பு 10". தொலைபேசி : 011- 2661866, 011-2661828.

ஈ.எஸ்.ராமநாயக்க,
(தீவு முழுவதுக்குமான சமாதான நீதவான்),
நீதிமன்ற ஆணையாளர், சிரேஷ்ட விலைமதிப்பீட்டாளர்,
உத்தரவு பெற்ற ஏல விற்பனையாளர்.

இல. 11/55, போகஹவத்த,
குடாபுத்கமுவ, அங்கொட,
தொலைபேசி இல. : 011-2053286, 072-3207533, 076- 9217329.

06- 198

**ஹற்றன் நெஷனல் வங்கி பீஎல்சீ - யக்கல கிளை**
(முன்னர் வரையறுக்கப்பட்ட ஹற்றன் நெஷனல் வங்கி என அறியப்பட்டது)

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின்கீழ் நடைபெறும் பிரசித்த விற்பனை

புத்தளம் மாவட்டத்தில் உள்ள முந்தல் பிரதேச செயலகம் மற்றும் ஆரச்சிக்கட்டுவ பிரதேச சபையின் எல்லைக்கு உட்பட்ட பம்புவத்தன் மறுபெயர் ஆண்டிமுனல் கிராமத்தில் உள்ள "பம்புவத்தம் எஸ்டேட்" என அழைக்கப்படும் காணியில் மொத்த 66 ஏக்கர் விஸ்தீரணத்தைக் கொண்ட மூன்று பெறுமதியான சொத்துக்கள் அதில் உள்ள கட்டிடங்கள் மற்றும் அதில் உள்ள அனைத்தும், இந்தக் காணி கிழக்கு எல்லையில் சுமார் 1. கி.மீ. சாலை முகப்பையும், மேற்கு எல்லையில் கடல் முகப்பையும் கொண்டது.

ஹற்றன் நெஷனல் வங்கி பீ எல் சீ சார்பில் எழுதப்பட்ட ஹற்றன் நெஷனல் வங்கி பீஎல்சீ சார்பில், கம்பஹா பிரசித்த நொத்தாரிசு பீ. என். ஏக்கநாயக்கவினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2017.03.24 ஆந் திகதியிடப்பட்ட 12962 ஆம் இலக்க அடகு முறியின் கீழ் சிலோன் கோக்கனட் பிளாண்டேஷன் ( பிறைவேட்) லிமிட்டட் கடப்பாடுடையவர்களாக, அடமானப் பத்திரத்தில் வழங்கப்பட்ட கடன் வசதிகளுக்காக செலுத்த வேண்டிய தொகையை செலுத்துவதில் தவறிழைத்துள்ளதால்,

ஹற்றன் நெஷனல் வங்கியால் எனக்களிக்கப்பட்ட அதிகாரத்தின் பிரகாரம்,சொல்லப்பட்ட முறிகளின் கீழ் அறவிடப்பட வேண்டிய கடன் தொகை, சகல விதிப்பனவுகள் மற்றும் ஏல விற்பனைக் கட்டணங்கள் உட்பட சகல செலவுகளையும், அறவிடுவதற்காக இங்கு கீழ் விபரமாக குறிப்பிடப்பட்டுள்ள ஆதனம் காணி மற்றும் அதிலுள்ள மண், மரங்கள், பயிர்ச்செய்கைகள், கட்டிடங்கள் மற்றும் அத்துடனான எல்லாம்.

முதலாவது அட்டவணையில் விபரிக்கப்பட்ட ஆதனம், 2023, யூலை மாதம் 12ஆந் திகதி மு.ப 9.00 மணிக்கு,

இரண்டாவது அட்டவணையில் விபரிக்கப்பட்ட ஆதனம், 2023, யூலை மாதம் 12ஆந் திகதி மு.ப 9.20 மணிக்கு,

மூன்றாவது அட்டவணையில் விபரிக்கப்பட்ட ஆதனம், 2023, யூலை மாதம் 12ஆந் திகதி மு.ப 9.40 மணிக்கு அதே இடத்தில் ஆரம்பிக்கும் பகிரங்க ஏலத்தில் என்னால் விற்பனை செய்யப்படும்.

**முதலாவது அட்டவணை**

1. வடமேல் மாகாணம், புத்தளம் மாவட்டத்தில் உள்ள முந்தல் பிரதேச செயலகம் மற்றும் உடப்பு அக்கரைபற்று கிராம அலுவலர் பிரிவில் உள்ள ஆராச்சிகட்டுவ பிரதேச சபையின் எல்லைக்கு உட்பட்ட பம்புவத்தன் மறுபெயர்

ஆண்டிமுனல் கிராமத்தில் உள்ள "பம்புவத்தம் எஸ்டேட்" என அழைக்கப்படும் காணியுடனான கட்டடங்கள் மற்றும் அத்துடன் உள்ள எல்லாம், உரிமம் பெற்ற நில அளவையாளர் ஏ. எப். சமீரினால் தயாரிக்கப்பட்ட 1965 திகதியிடப்பட்ட வரைபட இலக்கம் 701 இல் விபரமாக விளக்கப்பட்டுள்ள காணித்துண்டு 3 என அடையாளம் இடப்பட்ட பிரிக்கப்பட்ட மற்றும் வரையறுக்கப்பட்ட பகிரப்பட்ட காணியின் எல்லைகள் வடக்கு: காணித்துண்டு 4; கிழக்கு: காணித்துண்டு 11 - வீதி ஒதுக்கீடு; தெற்கு: காணித்துண்டு 2; மேற்கு: கடற்கரை மற்றும் இருபத்து ஐந்து ஏக்கர் (25ஏ. 00 றூ. 00பே.) விஸ்தீரணத்தை கொண்டது,.

### இரண்டாவது அட்டவணை

வடமேல் மாகாணம், புத்தளம் மாவட்டத்தில் உள்ள முந்தல் பிரதேச செயலகம் மற்றும் உடப்புவின் அக்கரைபற்று கிராம அலுவலர் பிரிவில் உள்ள கிராம அலுவலர் பிரிவிள் உள்ள ஆராச்சிகட்டுவ பிரதேச சபையின் எல்லைக்கு உட்பட்ட பம்புவத்தன் மறுபெயர் ஆண்டிமுனல் கிராமத்தில் உள்ள "பம்புவத்தம் எஸ்டேட்" என அழைக்கப்படும் காணியுடனான கட்டடங்கள் மற்றும் அத்துடன் உள்ள எல்லாம், உரிமம் பெற்ற நில அளவையாளர் ஏ. எப். சமீரினால் தயாரிக்கப்பட்ட 1965 திகதியிடப்பட்ட வரைபட இலக்கம் 701 இல் விபரமாக விளக்கப்பட்டுள்ள காணித்துண்டு 4 என அடையாளம் இடப்பட்ட பிரிக்கப்பட்ட மற்றும் வரையறுக்கப்பட்ட பகிரப்பட்ட காணியின் எல்லைகள் வடக்கு: காணித்துண்டு 5; கிழக்கு: காணித்துண்டு 11 - வீதி ஒதுக்கீடு; தெற்கு: காணித்துண்டு 3; மேற்கு: கடற்கரை மற்றும் இருபத்து ஐந்து ஏக்கர் (25ஏ. 00 றூ. 00பே.) விஸ்தீரணத்தை கொண்டது.

### மூன்றாவது அட்டவணை

வடமேல் மாகாணம், புத்தளம் மாவட்டத்தில் உள்ள முந்தல் பிரதேச செயலகம் மற்றும் உடப்புவின் அக்கரைபற்று கிராம அலுவலர் பிரிவில் உள்ள ஆராச்சிகட்டுவ பிரதேச சபையின் எல்லைக்கு உட்பட்ட பம்புவத்தன் மறுபெயர் ஆண்டிமுனல் கிராமத்தில் உள்ள "பம்புவத்தம் எஸ்டேட்" என அழைக்கப்படும் காணியுடனான கட்டடங்கள் மற்றும் அத்துடன் உள்ள எல்லாம், உரிமம் பெற்ற நில அளவையாளர் ஏ. எப். சமீரினால் தயாரிக்கப்பட்ட 1965, மாச்சு 08 திகதியிடப்பட்ட வரைபட இலக்கம் 701 இல் விபரமாக விளக்கப்பட்டுள்ள காணித்துண்டு 5 என அடையாளம் இடப்பட்ட பிரிக்கப்பட்ட மற்றும் வரையறுக்கப்பட்ட பகிரப்பட்ட காணியின் எல்லைகள் வடக்கு: ஐ. எம். பெருமாள் மற்றும் ஏனையவர்களால் உரிமை கோரப்படும் காணி; கிழக்கு: காணித்துண்டு 11 - வீதி ஒதுக்கீடு; தெற்கு: காணித்துண்டு 4; மேற்கு: கடற்கரை மற்றும் பதினாறு ஏக்கர் (16ஏ. 00 றூ. 00பே.) விஸ்தீரணத்தை கொண்டது.

உரிமம் பெற்ற நில அளவையாளர் ஏ. எப். சமீரினால் தயாரிக்கப்பட்ட 1965, மாச்சு 08 ஆந் திகதியிடப்பட்ட வரைபட இலக்கம் 701 உள்ள காணித்துண்டு 11 இற்கு மேலான வழியினை உபயோகிப்பதற்கான உரிமையும் சேர்த்து.

**பணிப்பாளர் சபையின் தீர்மானம் முடிவு அறிவித்தல் கள்.**- 2023.02.10 ஆந் திகதியிடப்பட்ட இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியிலும், 2023.02.17 ஆந் திகதிகளில் பிரசுரிக்கப்பட்ட 'மவ்பிம', 'டெயிலி மிரர்' மற்றும் 'தினக்குரல்' ஆகிய பத்திரிகைகளையும் பார்க்கவும்.

**ஆதனத்திற்குப் பிரவேசிக்கும் வழி.**- சிலாபத்தில் இருந்து புத்தளம் வீதியில் சுமார் 24 கிலோ மீற்றர் பயணித்து, உடப்புவ வீதியில் இடப்புறம் திரும்பி உடப்புவ நகரம் வரை சுமார் 6.4 கிலோ மீற்றர் சென்று, மீண்டும் சுமார் 3.8 கிலோமீற்றர் சென்று இடது புறத்தில் அமைந்துள்ள சொத்தை அடையலாம். லொட் 3A, 4A மற்றும் 5A ஆகியவை 1 கி.மீ.தூரத்திற்குச் சாலையில் அமைந்துள்ளது.

**கட்டணங்கள் செலுத்தும் முறை** .- உத்தேசக் கொள்வனவாளர் ஏல முடிவில் பின்வரும் கட்டணங்களை பணமாக ஏலதாரருக்கு செலுத்த வேண்டும்:-

(1) கொள்வனவு விலையின் 10% ;
(2) உள்ளூராட்சி மன்ற வரி 1 %;
(3) ஏலதாரரின் தரகுப் பணம் 2.5% ;
(4) ஏலத்திற்காக செலவு செய்யப்பட்ட முழு விளம்பரச் செலவுகள்;
(5) இலிகிதர் மற்றும் கூவுவோர் கட்டணம் 2,000.00;
(6) விற்பனை நிபந்தனை உறுதிப்படுத்தலுக்கான நொத்தாரிசுக் கட்டணம் 2,000.00.

மேலும் கொள்வனவு தொகையில் மிகுதி 90% ஏலத் திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் ஹற்றன் நெஷனல் வங்கி பீஎல்சீக்கு செலுத்த வேண்டும்.மேற்குறிப்பிட்டவாறு மிகுதிப் பணம் குறிப்பிட்ட திகதிக்கு முன்னால் செலுத்தப்படாவிடத்து செலுத்திய பத்து வீத (10%) பணத்தை திருப்பித் தராமலிருப்பதற்கு அதே காணியை மறு ஏல விற்பனை செய்வதற்கும் வங்கிக்கு அதிகாரமுண்டு.

உரித்தாதனம்,ஏனைய ஆவணங்கள் மற்றும் விபரங்களை பெற்றுக்கொள்ள கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள அதிகாரிகளிடம் விசாரணைகளை மேற்கொள்ளவும், "சிரேஷ்ட முகாமையாளர் (வர்த்தக அறவீடு), ஹற்றன் நெஷனல் வங்கி பீ எல் சீ , இல. 479, ரி. பி. ஜாயா மாவத்தை, கொழும்பு 10." தொலைபேசி இல. : 011- 2661833, 011-2661836, 011- 2661826.

கே. பீ. என். சில்வா (ச.நீ.),
சிரேஷ்ட ஏல விற்பனையாளர்,
விலைமதிப்பீட்டாளர்,
மற்றும் நீதிமன்ற ஆணையாளர்.

இல. 109/12A, கோதமி வீதி,
பொரளை, கொழும்பு -08,
தொலைபேசி இல. : 011-2674626, 077-8441812.

06- 223

**செலான் வங்கி பீ.எல்.சீ. - மாத்தளை கிளை**

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 9 ஆம் பிரிவின் கீழான ஏல விற்பனை*

பெறுமதிமிக்க இடம் ஒன்றின் பிரசித்த ஏல விற்பனை

*மாத்தளை அதன் பதிவு அலுவலகம் அமைந்துள்ள மற்றும் அதன் பதிவு இலக்கம் PV 87236 என்ற பதிவிலக்கத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்ட விதிகளின் கீழ் இலங்கையில் ஒருங்கிணைக்கப்பட்ட கம்பனியொன்றான எஸ்.கே.எஸ்.டிரஸ்ட் என்ட் இன்வெஸ்ட்மென்ட் கம்பனி (பிரைவேட்) லிமிடெட் மற்றும் மாத்தளையில் வசிக்கும் செம்பு குட்டிகே சஞ்சய நளின் த சில்வா என்பவர் "கடப்பாடுடையவராகவும்/ஈடுவைத்தவராகவும்" என்ற வகையில் பணம் செலுத்தத் தவறியுள்ளார், அதனால் பிரசித்த நொத்தாரிசு ஹேமன் மெலனி டீ. லிமா என்பவரினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2012, நவெம்பர் மாதம் 24 ஆந் திகதி 1503 ஆம் இலக்க ஈட்டு முறி மற்றும் 2019, மே மாதம் 30 ஆந் திகதி 1770 ஆம் இலக்க ஈட்டு முறிகளின் மூலம் செலான் வங்கியில் அடகு வைக்கப்பட்ட கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள காணியானது.*

*2023 ஆம் ஆண்டு யூன் மாதம் 28 ஆந் திகதி மு.ப. 9.15 மணிக்கு செலான் வங்கி பீஎல்சீ யினால் எனக்கு வழங்கப்பட்ட அதிகாரத்திற்கு உட்பட்டு செலான்வங்கி பீஎல்சீ, இல.90, காலி வீதி, கொழும்பு 3 இல் உள்ள கிளை வளாகத்தில் என் மூலமாக பகிரங்க ஏல விற்பனையில் விற்கப்படும்.*

இந்த ஏல விற்பனையானது சுகாதார அமைச்சினால் வெளியிடப்பட்டுள்ள கொவிட் 19 நெறிமுறைகளைப் பின்பற்றுவதற்கான கண்டிப்பான வழிகாட்டுதலுக்கேற்ப நடாத்தப்படும்.

**அட்டவணை**

*மத்திய மாகாணம், மாத்தளை மாவட்டத்தில், மாத்தளை மாநகர சபை எல்லைக்குள் மற்றும் பிரதேச செயலக அலுவலக பிரிவிற்குள், 328 சி ஆம் இலக்க - கிரிகல்பொத்த கிராம அலுவலர் பிரிவிற்குள் உடுகம கிராமத்தில் மாத்தளையில் உள்ள உரிமம் பெற்ற நில அளவையாளர் யு.எச்.பி.கே.எம்.டி. அங்கம்மன என்பவரினால் வரையப்பட்ட 2015.03.09 ஆந் திகதியிடப்பட்ட 4267 ஏ ஆம் இலக்க வரைபடத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நிகவெல எஸ்டேட் ( பி.எம்.கே. குமாரசாமி என்பவரினால் வரையப்பட்ட 1958.08.28 ஆந் திகதியிடப்பட்ட 1976 ஆம் இலக்க வரைபடத்தில் குறிப்பிடப்பட்டுள்ள காணியானது லொட் 1 என அடையாளமிடப்பட்டு பிரித்து ஒதுக்கப்பட்ட காணித்துண்டின் அளவு மூன்று றூட் முப்பத்தெட்டு தசம் ஐந்து பூச்சியம் பேர்ச்(0ஏ.03றூ.38.50பே.) விசாலமான காணி, கட்டடங்கள் மரங்கள் பயிர்ச்செய்கைகள் மற்றும் அதில் அமைந்துள்ள அனைத்தும் அடங்கலாக உள்ள காணி மேலும் உரிமம் பெற்ற நில அளவையாளர் பி.எஸ்.ஏ. குரூன் என்பவரினால் வரையப்பட்ட 1956.03.24 ஆந் திகதியிடப்பட்ட 1964 ஆம் இலக்க வரைபடத்தில் குறிப்பிடப்பட்டுள்ள சி 1 என அடையாளமிடப்பட்ட காணி வாளாகத்தில் இருக்கும் மற்றும் பராமரிக்கப்படும் தண்ணீர் குழாய்களில் மட்டுமே தண்ணீர் எடுக்கும் உரிமையுடன் சேர்த்து.*

**காணிக்குப் பிரவேசிக்கும் வழி**: *மாத்தளை செலான் வங்கிக்கு அருகாமையில் இருந்து தம்புள்ளை வீதியில் 5.7 கி.மீ. தூரம் சென்ற பிறகு வலது பக்கமாக பிரதான சாலையை நோக்கி இந்த காணி அமைந்துள்ளது.*

**தீர்மானம் பற்றிய அறிவித்தலுக்கு**: *2023.04.12ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியையும் 2023.04.04 ஆந் திகதிய " லங்காதீப", "டெய்லி மிரர் " மற்றும் "தினக்குரல்" ஆகிய பத்திரிகைகளிலும் பிரசுரிக்கப்பட்டுள்ளது.*

**கட்டணம் செலுத்தும் விதம்**.- உத்தேசக் கொள்வனவாளர் ஏல விற்பனை முடிவில் பின்வரும் கட்டணங்களைப் பணமாக ஏலதாரருக்குச் செலுத்த வேண்டும் :-

(1) கொள்வனவு விலையில் பத்து வீதம் 10% (பத்து வீதம்);
(2) உள்ளூராட்சி மன்ற வரி 1% (ஒரு வீதம்);
(3) ஏலதாரரின் தரகுப் பணம் 2.5% (இரண்டரை வீதம்) ;
(4) ஏல விற்பனை நிபந்தனை உறுதிப்படுத்தலுக்கான நொத்தாரிசுக் கட்டணம் 3,000 ரூபா ;
(5) இலிகிதர் மற்றும் கூவுவோர் கட்டணம் ;
(6) ஏலத்திற்காகச் செலவு செய்யப்பட்ட முழு விளம்பரச் செலவுகள்.

மிகுதி 90 வீதத்தையும் , இலங்கை அரசாங்கத்தினாலோ அல்லது வேறு அதிகார சபையினாலோ விதிக்கப்படும் சட்டரீதியான வரி அல்லது கட்டணங்கள் ஏதுமிருப்பின் அவற்றோடு ஏலத்திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் செலான் வங்கி பீ.எல்.சீ. தாபனத்திற்கு செலுத்துதல் வேண்டும். மேற்குறிப்பிட்டவாறு மிகுதிப் பணம் குறிப்பிட்ட திகதிக்கு முன்னால் செலுத்தப்படாதவிடத்து, செலுத்திய பணத்தை திருப்பித் தராமலிருப்பதற்கும் அதே காணியை மறு விற்பனை செய்வதற்கும் வங்கிக்கு அதிகாரம் உண்டு.

"உரித்துறுதி, ஏனைய ஆவணங்கள் மற்றும் விபரங்களைப் பெற்றுக் கொள்ள கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள அதிகாரிகளிடம் விசாரணைகளை மேற்கொள்ளவும் , "பிரதான முகாமையாளர்', (சட்டம்) செலான் வங்கி பீஎல்சீ, இல.90, காலி வீதி, கொழும்பு 3" .

தொலைபேசி இல. 011-2456472, 011- 2456473.

எதுவித முன்னறிவித்தலும் இன்றி மேற்படி ஏல விற்பனையை நடாத்துவதற்கும்/இரத்துச் செய்வதற்கும் வங்கிக்கு அதிகாரமுண்டு.

சந்திமா பிரியதர்ஷனீ கமகே,
நீதிமன்ற ஆணையாளர்,
விலைமதிப்பீட்டாளர் மற்றும்
உரிமம் பெற்ற ஏலதாரர்.

இல. 9-i, ஹைலெவல் வீதி,
சர்வோதய மாவத்தை,
பனாகொட, ஹோமாகம.
தொலைபேசி இலக்கம்: 071-4318252, 011- 2173282.

06-218

---

செலான் வங்கி பீ.எல்.சீ. - செங்கலடி கிளை

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 9 ஆம் பிரிவின் கீழான ஏல விற்பனை

பெறுமதிமிக்க இடம் ஒன்றின் பிரசித்த ஏல விற்பனை

ஏறாவூர் 01ஏ ஐ வதிவிடமாகக் கொண்ட முஹம்மது ஹனிபா முஹம்மது அமீர் அல்லது முகம்மது ஹனிபா முகமது அமீர் என்பவர் கடப்பாட்டாளராகவும்/ ஈடுவைத்தவராகவும்" என்ற வகையில் பணம் செலுத்தத் தவறியுள்ளார். அதனால் பிரசித்த நொத்தாரிசு அருள்வாணி சுதர்ஷன் என்பவரினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2022, மாச்சு மாதம் 25 ஆந் திகதி 1138 ஆம் இலக்க ஈட்டு முறியின் மூலம் செலான்வங்கியில் அடகுவைக்கப்பட்ட கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள காணியானது.

2023 ஆம் ஆண்டு யூன் மாதம் 28 ஆந் திகதி மு.ப. 9.00மணிக்கு செலான் வங்கி பீஎல்சீ யினால் எனக்கு வழங்கப்பட்ட அதிகாரத்திற்கு உட்பட்டு செலான்வங்கி பீஎல்சீ, இல.90, காலி வீதி, கொழும்பு 3 இல் உள்ள கிளை வளாகத்தில் என் மூலமாக பகிரங்க ஏல விற்பனையில் விற்கப்படும்.

இந்த ஏல விற்பனையானது சுகாதார அமைச்சினால் வெளியிடப்பட்டுள்ள கொவிட் 19 நெறிமுறைகளைப் பின்பற்றுவதற்கான கண்டிப்பான வழிகாட்டுதலுக்கேற்ப நடாத்தப்படும்.

அட்டவணை

